


Vennila

# மன்மத வேஷங்கள்

## 1

''விஜி...''

காதருகில் கணவனின் உதட்டசைவு...

சாதாரணமாயிருந்தால் விஜயா, 'சட்'டெனத் திரும்பி, தனது இரு கரங்களாலும் அவன் கழுத்தைச் சுற்றி வளைத்திருப்பாள்.

என்னதான் அடித்துப் போட்டாற் போலத் தூங்கினாலும், ரகுராமின் மூச்சுக் காற்று தன் மேல் பட்டாலும் உடனே எழுந்து உட்கார்ந்து விடுவாள் அவள்.

இன்று அப்படி எழுந்திருக்கப் பிடிக்கவில்லை... தூக்கமில்லாமல், தூங்குவது போல நடிக்கிறாள் அவள்...

அடிக்கடி கண்ணீர் கண்களை மறைக்கிறது.

'ச்சே... இப்படி எடுத்ததுக்கெல்லாம் அழச்கூடாது. இப்ப என்ன நடந்து போச்சு? ஒவ்வொரு வீட்டுல, இதைவிட மோசமான விஷயங்களெல்லாம் நடக்கலையா...'

அவள், தன்னை சமாதானப்படுத்திக் கொண்டு நிதானமாய் திரும்பிப் பார்க்கிறாள்.

''என்ன...''

Vennila

"உனக்கு எத்தனைக் கோபம் வரும்னு எனக்குத் தெரியும் விஜி... அத்தனையும் நியாயம்தான். உன்னால் முடியுமானா, என் கன்னத்துல நாலு அறை வைவி..."

அவள் பரபரத்துப் போய் விட்டாள்.

'ஐயோ... என்னங்க இது, என்னென்னமோ பேசறீங்க நீங்களே சொல்லுங்க. ஒரு பொண்ணு வீட்டுல கோவிச்சிட்டு வெளியே வந்திட்டா, அவளை சமாதானப் படுத்தி வீட்டுக்கே திரும்ப அனுப்பி வைக்கணும். அதை விட்டுட்டு அவளை, நம்ம வீட்டுக்கு வந்து இருக்க சொல்லிட்டேன்னு சொல்றீங்களே, அக்கம் பக்கத்துலயும் மனுஷங்கதானே இருக்காங்க... ஏற்கனவே நம்ம வீடுன்னா அவங்களுக்குத் தொக்கு... ஏன், உங்க ஆபீஸ்லேயே, உங்க கூட வேலை செய்யறவங்க எத்தனை பேர் இல்லே? அவங்க யாராவது இந்தப் பொறுப்பை ஏத்துக்க முன் வந்தாங்களா?.'

மனைவியின் அத்தனைக் கேள்விகளுக்கும் பதிலே சொல்லாமல் விட்டத்தைப் பார்க்கப் படுத்திருக்கிறான் அவன்.

விஜயா எழுந்து உட்கார்ந்து அவனையே பார்க்கிறாள்.

பெட்ரூம் விளக்கின் அமைதியான நீல விரிப்பில் - ரகுராமைப் பார்க்கையில் அத்தனைக் கோபத்திலும் மனசு பாகாய் இளகுகிறது...

வழக்கமான ரீதியில் மனசு ஓடுகிறது.

'பாரேன்.... ரங்கநாதன் பன்னி கொண்டிருக்காப்பல..,

ரகுராமின் பளீரிடும் நிறமும், கூரிய நாசியும், அலையலையாய் கிராப்பும்......

அவனைப் பார்க்கும் பொழுதெல்லாம் மனசுக்குள் ஒரு கேள்வி கிளம்பத் தவறியதில்லை.

"ஆமா.... உங்களை எந்த சினிமாக்காரனும் சினிமாவுல நடிக்க கூப்பிடலையா?"



"அழகா இருந்தா-சினிமாவுல நடிச்சுத்தான் ஆகணும்னு ஏதாவது தியரி இருக்கா என்ன. ஒருத்திக்கு புருஷனா - ரெண்டு குழந்தைகளுக்குத் தகப்பனா இருக்கக்கூடாதா?"

"என்னதான் இருந்தாலும் உங்க வீட்டுல இன்னும் கொஞ்சம் அழகான பொண்ணா உங்களுக்கு ஏத்த ஜோடியாப் பார்த்திருக்கலாம்..."

"ஏன் உனக்கென்ன குறைச்சல். அது என்னமோ தெரியலை... உன்னை விட அழகான பொண்ணுங்களை நான் பார்க்காம இல்லே... ஆனாலும், உன்கிட்ட இருக்கிற 'கிக்' வேற ஒருத்திக் கிட்ட வரவே மாட்டேங்குது.'

விஜயாவுக்கு இந்த வார்த்தைகளே போதும். திருமணமானப் புதுசில் கணவன் இத்தனை அழகாக இருப்பதுடன் தன் அழகை இன்னும் எடுப்பாகக் காட்டும்படி, பார்த்து பார்த்து அலங்கரித்துக் கொள்வதைப் பார்த்து பயந்திருக்கிறாள்.

எப்பொழுதோ ஜெயகாந்தனின் கதை ஒன்றில் அழகானப் புருஷனைப் பார்த்தே அகமகிழ்ந்த அசட்டு மனைவியும் - கடைசியில் அவன் இன்னொருத்தியைக் கொண்டு வந்து நிறுத்தியதும் - இந்த மனுஷனின் சுயரூபம் தெரிந்தபின் முதல் தாரம் இரண்டாவதாக வந்தவள் இருவரும் அவனைப் புறக்கணிப்பதும்...

அந்தக் கதையின் பெயர் என்ன......

நினைவில் இல்லை. ஆனால் கதையின் ஒவ்வொரு சம்பவமும் நினைவில் அழுந்தப் பதிந்திருந்தன,

ரகுராம் அழகானவனாக மட்டுமின்றி எல்லோரிடமும் சரளமாகப் பழகுவதால் விஜயா, நிறையப் பிரச்னைகளைச் சமாளிக்க வேண்டியிருந்தது.

ஆபிசிலிருந்து வீடு திரும்பும் போது 'பொசுக் பொசுக்கென யாரையாவது அழைத்து வந்து விடுவான்.

Vennila

அதுவும் முக்கால்வாசிப்பொழுதுபெண் விருந்தாளிகள்...

"விஜிம்மா, இவங்கதான் மிஸஸ் பிரபா. எங்க ஆபீஸ் அஸிஸ்டெண்ட் மானேஜர். தினமும் அது எப்படி அலுக்காம சலிக்காம விதவிதமா டிபன் செஞ்சுத் தர்றாங்க உங்க ஒய்ஃப்னு கேட்டுட்டே இருப்பாங்க. 'இதோ பாருங்க, நேரே அழைச்சிட்டுப் போறேன். நீங்களே கேட்டுக்குங்க' - ன்னு சொல்லிட்டேன்."

"இவ யாருன்னு பார்க்கறியா விஜி? எங்க ஆபீஸிலே ஒரு அழுமூஞ்சி டைப்பிஸ்ட் இருக்கறதா சொல்லுவேன் இல்லே... அது இவதான். நான் தேவையான அளவுக்கு புத்தி சொல்லியாச்சு... நீயும் கொஞ்சம் சொல்லு"

"என் சினேகிதன் சுந்தரமூர்த்திய தெரியுமோ... அவனை திடீர்னு நாலு நாளைக்கு 'டில்லிக்குப் போயிட்டு வாடா' - என்று சொல்லிட்டார் மானேஜர். பெண்டாட்டியையும் அழைச்சிட்டுப் போயிடலாம்னு பார்த்தா அவளுக்கு நூத்திநாலு டிகிரி ஜுரம். எழுப்பி உட்கார்த்தி வைக்கவே ஒருத்தர் வேண்டியிருக்கு... என்னைக் கொஞ்சம் கவனிச்சுக்க சொல்லி இருக்கான். ஒண்ணுமில்லே... சாயந்திரம் வேலைக்காரி அவவீட்டுக்குப் போய் அவ புருஷனுக்கு சோறு போட்டுட்டு திரும்பி வர்ற வரைக்கும் நான் இவளை கவனிச்சுக்கணும். அவ்வளவுதான்!"

விஜயா புன்னகை மாறாமல் இத்தனையையும் ஏற்றுக்கொண்டாலும் அக்கம் பக்கத்தில் இருப்பவர்களுக்கு ஏனோ உறுத்துகிறது.

இவள் காதுபடவே பேசினார்கள்.

விஜயாவைப் பெற்றவள் ஒருமுறை பெண்ணைப்பார்க்க வீட்டுக்கு வந்திருந்தபோது மாப்பிள்ளையைத் தேடி, யாரோ ஒரு பெண் வீட்டுக்கு வந்ததையும் இருவரும் கூடத்து சோபாவில் உட்கார்ந்து மணிக்கணக்காய் பேசிய



தையும், பிறகு - அவளைக் கொண்டு விடுவதற்காக மாப்பிள்ளை, பத்தரை மணிக்கு சட்டையை மாட்டிக் கொண்டு போனவன் நடு இரவு ஒரு மணி சுமாருக்கு வந்து கதவைத் தட்டியதையும் பார்த்து அதிர்ந்து போய் விட்டாள்.

"எது?"

"யார் அந்த மினுக்கி?"

"ஐயோ அம்மா... சத்தமா சொல்லி வைக்காதே அவர் காதுல விழுந்து தொலைக்கப் போறது..."

"விழட்டுமே... அப்பவாவது புத்தி வர்றதான்னு பார்ப்போம்."

"கத்தாதேம்மா. இப்ப என்ன நடந்து போச்சு"

"இன்னும் என்னடி - "

அம்மாவை பேச விடவில்லை அவள்.

"அம்மா... நீ கிராமத்து மனுஷி. ஒரு புருஷனும் பொம்மனாட்டியும் பேசினா தப்பாவே எடுத்துட்டு வாய் கிழியப் பேசிப் பழகிப் போனவங்க..."

"நானாடி வாய் கிழியப் பேசறேன்?"

"நீயின்னா நீயா... உங்க வம்சத்தைச் சொல்றேன்..."

"ஓகோ. அப்ப, நீ எந்த வம்சத்துலப் பொறந்தவ?"

"அம்மா... குதர்க்கமாப் பேசாதே. நீதான் பார்த்துட்டே இருந்தே இல்லே? அவங்க ரெண்டு பேரும் எதிர் எதிர் சோபாவுல உட்கார்ந்து - பத்திரிகையில வர்ற கதைகளைப் பத்தி பேசிட்டிருந்தாங்க. சினிமாவாலே - சமுதாயம் எப்படி பாதிக்கப் படறதுன்னு பேசிட்டிருந்தாங்க... அப்புறம்..."

"ஏண்டி. நானும் தெரியாமத்தான் கேட்கறேன். ஒருத்தி, பத்தரை மணி வரைக்குமா - இன்னொருத்தி வீட்

Vennila

டுல உட்கார்ந்து அதுவும் ஒரு ஆம்பிளையோடப் பேசிட்டிருப்பா... வீட்டுல புருஷன்காரன் தேட மாட்டான்? பெத்தவங்க கண்டிக்க மாட்டாங்க? என் பொண்ணா இருந்தா வெட்டி, மடவாயிலே வைப்பேன்!''

''அதான் அவ உன் பொண்ணாப் பொறக்கலை. என்னமோ பேசிட்டிருந்தா. நேரமாயிடுச்சு... விடேன்...''

''ஒழியட்டும். கொண்டு போய் பஸ் ஏத்திவிடப்போன மனுஷர் ஒரு மணிக்குத் திரும்பி வந்தா என்ன அர்த்தம்?''

''பஸ் கிடைக்கலைன்னு அர்த்தம். வேற வழி இல்லாம அவளை ஆட்டோவுல கொண்டு விட்டிருக்கார். திரும்பறப்ப ஆட்டோ மக்கர் பண்ணிடுச்சு. சாந்தோம்லேயிருந்து அடையார் வரைக்கும் நடந்து வந்திருக்கார். இந்தக் கஷ்டத்துக்கு பேசாம, அவளை உன்னோடப் படுத்துக்கச்சொல்லிட்டு விடிகாலையில அனுப்பியிருக்கலாம்னு என் கிட்ட சொல்லிச் சொல்லி மாய்ஞ்சு போயிட்டார்.''

''நல்ல வேளை, தன்னோடப் படுக்க வச்சுக்கறதா சொல்லலையே உன் புருஷன்... அது மட்டும் நல்லது தான்...''

அன்றைக்கு விஜயா, அம்மாவிடம் பழியென சண்டை போட்டாள்.

ஊருக்குப் போவதற்கு முதல் நாள் அப்படியும் மனசு கேளாமல், மகளை அழைத்து வைத்துச் சொல்லி விட்டுப் போனாள் அந்தத் தாய்.

''நான் சொல்றேனேயின்னு தப்பா நினைக்காதே. பூட்டாதப் பெட்டியும் பொதுவுல அவிழ்ந்த கட்டுச் சோறும் நம்முடையதில்லேயின்னு சொல்லுவாங்க. எவளோ ஒருத்தியும், எவனோ ஒருத்தனும் எத்தனை காலத்துக்குத் தான் பத்திரிகை கதைங்களையும், சினிமாக் கதைகளை



யும் பேசிட்டிருப்பாங்கன்னு நினைக்கறே... நீயும் நானும் பார்க்காத சினிமாவா, படிக்காத கதையா... மன்மத லீலை படத்தை நம்ம ஊர் டெண்டுலேயே நாலு தடவைப் பார்த்தியேடி....''

''இவர் அந்த மாதிரிப் பட்டவர் இல்லேம்மா. மனசு வெள்ளை... எனக்குத் தெரியும்...''

''தெரிஞ்சா சரிதான். நீயும் அவனும் ரெண்டு வளையங்களா கோர்த்திருந்தப்ப-ஏதாவது அசம்பாவிதம் நேர்ந்தா பிரிக்கறது சுலபம்... இப்ப-ப்ரியாவும் ஹரியும் வேற இருக்காங்க. சங்கிலி நீளமாயிடுச்சு. இனிமே உன் புத்திசாலித்தனத்தாலேதான் பிழைச்சுக்கணும்...''

''புருஷனைத் தலைப்புல முடிஞ்சிட்டு அலையச் சொல்றியா?''

அன்று. விஜி வாய் விட்டுச் சிரித்தாள்.

இன்றோ-தன் வாழ்க்கையே நகைப்புக்கு இடமாகி விடுமோ என்று பயப்படுகிறாள்.

பின் என்ன...

அப்படியும் இப்படியுமாய் போக்குவரத்தோடு பெண்களின் சகவாசம் இருந்த வரையில்-விஜி அதிகம் கவலைப் படவில்லை.

பல சமயங்களில், ரகுராமே, மனைவியின் மடியில் தலை வைத்துப் படுத்தபடிச் சொல்வதுண்டு.

''இந்தப் பொம்பிளைங்க என் கிட்ட என்னத்தைக் கண்டு இப்படி உருகறாங்கன்னே தெரியலை விஜி... ஆபீஸ்லே ஹெட் கிளார்க் வேதபுரி இல்லையா, அட்மினிஸ்ட்ரேஷன் ஆபீசர் பரந்தாமன் இல்லையா, எக்ஸிகியூடிவ் பாலாஜி இல்லையா... என் மூஞ்சியிலதான் இவங்களுக்கு-பாசமும் தெரியறது போல...''

Vennila

"அவ அவ தன் புருஷன் தன் கிட்ட எப்படி நடந்துக்கறான்கறதுல இருந்து — தன் வயித்துல குழந்தை உதைக்கிறது வரைக்கும் சகலமானதையும் சொல்றா விஜி...

"அதை விடு... எங்க ஆபீஸ் சரோஜியோட சினேகிதி கலான்னு ஒருத்தி... ஒரேயொரு தடவைதான் பார்த்தது... நேத்து லஞ்ச் டயத்துல சரோஜியத் தேடிட்டு வந்தா சரோஜி ஆபீசுக்கே வரல்லே. எப்ப அவ இல்லையோ பேசாமப் போக வேண்டியதுதானே. நேரே என் டேபிள் எதிரே வந்து உட்கார்ந்து ஒவ்வொரு மாசமும் அந்தமூணு நாளுல தான் படற அவஸ்தையைப் பத்தி அழமாட்டாத குறையாய் என் கிட்ட பேசறா. நான் என்ன கண்டேன் விஜி...

"இவளுங்க இப்படி பேசறதுனால — என் கூட வேலை செய்பவனுக்கெல்லாம் பொறாமை... ஆபீஸ்லே எனக்குப் பேரு வச்சிருக்காங்க. 'கிருஷ்ண பரமாத்மா'ன்னு தேவையா சொல்லு..."

ரகுராம் இப்படிச் சொல்லும் போது, விஜியே அவனுக்கு ஆறுதல் சொல்லுவாள்.

"உங்களோட நல்ல குணம், முகத்துல தெரியறது. யாரோ என்னவோ நினைச்சுட்டா நினைச்சுட்டுப் போகட்டும். என் புருஷனை, என் தங்க ராஜாவை நான் நம்பறேன்... வேற என்ன வேணும்..."

சில சமயங்களில் கொஞ்சம் கோபத்துடனும் சொல்லுவாள்.

"அந்தப் பொண்ணுங்களை என் கிட்ட அனுப்புங்க. லெப்ட் அண்ட் ரைட் கொடுத்து அனுப்பறேன்..."

இப்பொழுதும் அவன் விட்டத்தைப் பார்த்தபடி படுத்திருக்க விஜயாதான் பொருமித் தீர்க்கிறாள்.



விஷயம் இதுதான்.

ரகுராம் வேலை செய்யும் ஆபீசில் லலிதா என்று ஒரு டைப்பிஸ்ட். வடக்கத்திப் பொண்ணாம், நல்ல பணக்கார இடத்துப் பெண்தான். கல்யாணமாகும் வரையில் வீட்டில் சும்மா உட்கார்ந்திருக்கப் பிடிக்காமல் வேலையில் சேர்ந்திருக்கிறாள்.

வயசு இருபத்திரெண்டாகிறது. யாரையோ காதலிக்கிறாளாம்... வீட்டில் அதற்கு எதிர்ப்பாம். இதனால், பெற்றவர்களிடம் சண்டை போட்டுக் கொண்டு ஆபீசுக்கு வந்திருக்கிறாள்.

வந்தவள்–ஆபீஸ் நேரம் முடிந்ததும் காதலனுடைய இருப்பிடத்துக்குப் போய் சேரக் கூடாதோ?

நேரே - ரகுராமிடம் வந்து அடைக்கலம் புகுந்திருக்கிறாள்.

இவன், அவளை ஹோட்டலில் ரூம் எடுத்து தங்க வைத்து விட்டு விஜயாவிடம் மாலையில் வந்து சொல்கிறான்.

"அவளோட லவ்வர் வந்து அவளை அழைச்சிட்டுப் போற வரைக்கும், நம்ம வீட்டுல இருக்கேன்னு கெஞ்சறா விஜி .. எத்தனை நாளைக்குத்தான் ஹோட்டலுக்கு காசு கொடுக்க முடியும்...மேலும்...கல்யாணமாகாத பொண்ணு ஹோட்டல்ல தங்கினா-நாளைக்கு நாலு பேர் நாலு விதமாகப் பேசுவாங்க..."

"கல்யாணமாகாதப் பொண்ணு–நம்ம வீட்டுல வந்து தங்கினாலும் நாளைக்கு அதே நாலு பேர் நாலு விதமாப் பேச மாட்டாங்களா..."

"நானும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன் விஜி... அவ அழறா... இந்த பாலாஜி, பரந்தாமன் இவங்க வீட்டுல எல்லாம் போய் தங்கக்கூடாதோ... அவங்களுக்கெல்

Vennila

லாம் சொந்தமாக வீடு இருக்கு ..நமக்கு வாடகை வீடு தான்...ஸிங்கிள் பெட்ரூம் வேற ...''

''அவ லவ்வர் எங்கே இருக்கானாம்?''

''தெரியலையே...''

''தெரியலைன்னா ... நீங்க அவனைப் பார்த்த தில்லையா?''

''நான் மட்டுமில்லே. ஆபீஸ்லேயே யாரும் பார்த்த தில்லே... அவனுக்கு, இவளை அழைச்சிட்டுப் போய் வீட்டுல வச்சுக்க ஏதோ பிரச்னையாம் ... கொஞ்ச நாளைக்கு எப்படியாவது சமாளிக்க சொல்றான்... எனக் கும் பார்க்க ரொம்பப் பரிதாபமா இருந்தது விஜி...சரி யின்னு தலையாட்டிட்டேன்... இப்ப என்ன செய்யற துன்னு புரியலே...''

இரவெல்லாம் புலம்பி, கெஞ்சி, விஜியின் அரை குறை சம்மதத்தைப் பெற்று, மெள்ள அவளை வீட்டுக்கு அழைத்து வந்து விட்டான் ரகுராம்.

வந்தவளை 'வா'வெனக் கூப்பிடக் கூட இல்லே விஜி.

எப்படிக் கூப்பிடுவாள்?

புருஷனுடன் வம்படிக்க வருகிறவர்களை எல்லாரும்-ராத்திரி பத்தரை-பதினொரு மணிக்கு மேல் அவரவர்கள் வீட்டுக்குப் போய் விடுவார்கள் என்கிற எண்ணம் இருந்தா மட்டும் - ஏதோ போலியான திருப்தியாவது இருந்தது.

இப்பொழுது வீட்டோடு வந்திருக்கிறாள்...

எத்தனை நாள் இருப்பாளோ...

வந்தவளுக்கும் படுக்கையறையை ஒழித்துக் கொடுத்து விட்டு புருஷனுடன்–இரண்டு குழந்தைகளையும் இழுத்துக் கொண்டு வந்து நடு ஹாலில் படுக்கையை விரித் தாயிற்று.



ஹரியாவது சின்னவன். விவரம் புரியாத வயசு.... ப்ரியா அப்படியில்லையே...

பத்து வயசுப் பெண், புதிதாக வந்தவளை ஒரு விரோ தியைப் பார்ப்பது போலப் பார்க்கிறாள்.

ஒன்பதரை மணிக்கு ஆபீசுக்கு கிளம்ப வேண்டிய லதிகா - எட்டு மணி வரைக்கும் பெட்ரூம் கதவைத் தாழிட் டுக் கொள்ளாமலேயே காடாந்த காரமாய் தூங்குவதும் - ரகுராம் அவளை மெல்லியக் குரலில் 'குட்மானிங்' சொல்லி எழுப்புவது'', அவள் பல் துலக்கும் முன்பே - சமையல றைக்கு ஓடி வந்து 'அவ எழுந்துட்டா...காபியத் தர்றியா, நானே கொண்டு போய் கொடுத்திடறேன்... நீ சிரமப் பட வேண்டாம் என்று சொல்வதும்——...

எதிர்காலம் தனக்கு வெறும் பாலைவனம் தானோ என்கிற கிலியை, விஜயாவினுள் தோற்றுவிக்க... அவள் தடுமாறுகிறாள்...

'இவளை அப்பாவியின்னு சொல்றதா...இல்லே - கை தேர்ந்த நடிகர்னு நினைக்கறதா...'

இதில் அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் எல்லாருடைய கேள்விகளுக்கும் பதில் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் வேறு...

''யாரு அது...''

''என் வீட்டுக்காரரோட ஆபீஸ்லே வேலை செய் யறா . ''

''தமிழ்காரி இல்லே போலிருக்கே?''

''ஆமா,..வடக்கேயிருந்து... கல்யாணமாயிடுச்சு...

ஹஸ்பெண்டுக்கு இன்னும் மாற்றல் கிடைக்கலே... இவ மட்டும்... எப்படி தனியா ஹோட்டல்லே...''

''ஆமாமா .. ஆனாலும் காலம் இருக்கற இருப்புல உங்க வீட்டுக்காரரை மாதிரி தாரான மனசு யாருக்கும் வராது...''

Vennila

விஜயா பெரு மூச்செறிகிறாள்.

கணவன் எந்த அளவுக்கு தாரான மனசுடையவன் என்பது அன்றைக்கு நிதரிசனமாய் அவளுக்குத் தெரிந்து விட்டது.

படுக்கையறைக் கதவைத் தாழிடாமல் தூங்கும் பெண்ணிடமிருந்து, புருஷனைக் காப்பாற்றுவதற்காக எத்தனை நாள்தான் அவள்-இரவில் கண் விழித்து பகலில் தூங்க முடியும்?

அன்று சிறிது கண்ணயர்ந்து விட்டாள்... எத்தனை நேரம் தூங்கினாளோ...

திடுக்கிட்டு எழுந்தவள்...ரகுராம், பெட்ரூமிலிருந்து அவசரமாய் வெளியே வருவதைத்தான் பார்க்கிறாள்...

அப்பொழுதும் சபலம்; சொப்பனம் ஏதாவது கண்டு தொலைத்தோமா — இல்லை ... அவன்தான் இன்னொரு போர்வை, தலையணை எடுத்து வர உள்ளே போய் விட்டு வந்தானோ என்று—

மறுநாள் காலையிலேயே கணவனைக் கேட்டு விட்டாள்.

“எப்பத்தான் அவ காதலன் வந்து அவளை அழைச்சிட்டுப் போகப் போறானாம்?”

“......”

“கேட்கறேனில்லே? காதுல விழவில்லையா?”

“நானும் அதைத்தான் அவ கிட்ட கேட்டேன். நேத்து தான் சொல்றா... காதலனே இல்லையாம்...”

விஜயா, பொட்டிலறைந்தாற் போல திகைத்து, அவனை ஏறிட்டுப் பார்க்கிறாள்...

“பின்னே?”

“ஏதோ அப்பா அம்மாகிட்ட சண்டை போட்டுட்டு வந்துட்டா. மறுபடியும் அங்கே போகக் கூச்சம்...இத்தனை



நாள் எங்கே இருந்துட்டு வந்தேயின்னு கேட்கப் போறாங்களேங்கற பயம் வேற...

“இங்கே வந்து ஒரு வாரமாச்சு. முதல்லே அவளை வெளியே துரத்துங்க ... இல்லே, நான் வெளியே போறேன்...”

“திடீர்னு எங்கே போவா...எங்க ரெண்டு பேருக்குள்ளேயும் இதே தான் குழப்பம்...ராத்திரி படுத்தாத் தூக்கமில்லே...”

“அதான் அவ ரூம் பக்கம் போயிட்டு வந்தீங்களாக்கும்?”

ஒரு விநாடி அசந்து போனான் ரகுராம். அடுத்த நிமிஷமே சமாளித்துக் கொண்டு விட்டான்.

“ராத்திரிதான் மனசு விட்டுப் பேச டயம் கிடைக்கிறது... மேலும் அவ அழற மாதிரி இருந்தது. அதான் போய் சமாதானப் படுத்திட்டு வந்தேன். உனக்கு எங்க ரெண்டு பேர் மேலேயும் சந்தேகம்னா ‘பளிச்’னு சொல்லிடு... நான் இப்பவே அவளைக் கொண்டு போய் வேற வீட்டுல வைக்கறேன்...”

“வர்சு?”

“அதைப் பத்தி உனக்கென்ன...சோத்தை தின்னுட்டு வளைய வர வேண்டியவ-எதிர்த்தா பேசறே?”

அவன்-அவள் கன்னத்தில் ஓங்கியறைகிறான்.

அவள் கன்னத்தை, கையால் தாங்கிக் கொண்டு அவனையே வெறித்துப் பார்க்கிறாள்.

அதுதான் முதல் அடி...கன்னத்தில் விழுந்த அடி மட்டுமில்லை... நெஞ்சில் விழுந்த அடியும் கூட...

## 2

சொன்னபடியே லதிகாவை அழைத்துப் போய் வேளச்சேரியில் வீடு பார்த்து வைத்தான் அவன்...

Vennila

விஷயம் தெரிந்து அவனைப் பெற்றவர்களும், விஜயாவின் தாயும் ஓடி வந்தார்கள்.

ஒருத்தரைப் பார்த்தாற் போல எல்லாரும் ஒரே பாட்டையே பாடுகிறார்கள்.

"உனக்கு சமர்த்துப் போதாது..."

"புருஷனைக் கைக்குள்ளே வச்சுக்கத் தெரியலை..."

"எப்ப அவனுக்கு சபலம் இருக்குன்னு தெரிஞ்சதோ அப்பவே ரெண்டு போடு போட்டு அடக்கியிருக்கணும் நீ..."

"இன்னொருத்திக்கு எப்படி நீ, உன் வீட்டுல இடம் தரலாம்?"

விஜயா முதல் தடவையாக தனதுப் பொறுமையைக் கை விடுகிறாள்.

இரண்டு பக்க பெற்றோரையும் வைத்துக் கொண்டு கணவனுடன் பேச்சு வார்த்தை நடத்துகிறாள்.

"அங்கே போய் அவ கூட இருந்திட்டு என் பக்கத்துலேயும் நீங்க வர்றது பிடிக்கலே... நான் தனியா என் வழியப் பார்த்துட்டுப் போறேன். குழந்தைகள் உங்களைப் பார்த்து கெட்டுப் போயிடுவாங்க..."

இந்தப் பக்கம் விஜயாவின் தாய்-கன்னத்தில் இடிக்காதக் குறையாகச் சொல்கிறாள்.

"இதுக்காகவா எங்களை வரவழைச்சே... எப்படியாவது கெஞ்சிக் கூத்தாடி, அவன் கூட வாழறதுக்கு பார்ப்பியா... அதை விட்டுட்டு தனிய வந்தா.. இருபத்தியேழு வயசுக்கு நீ-புருஷனில்லாம வாழலாம். ஆனா ப்ரியாவை நினைச்சுப் பார்த்தியா... அவளுக்கு பத்து வயசாயிடுத்து. இன்னும் பத்து வருஷத்துல அவ கல்யாணத்துக்கு நிக்கறப்ப-நீ தனியா இருக்கறது எத்தனை பிரச்னைக்குரிய விஷயமா ஆகும்னு யோசிச்சுப் பார்த்தியா?"



இத்தனைச் சொல்லியவள்-ஒரு முக்கியமான விஷயத்தை மட்டும் சொல்லவில்லை. அதை, மகளே ஊகித்துக் கொள்வாள் என்று சொல்லாமல் விட்டு விட்டாள் போல...

விஜி, இரண்டு குழந்தைகளுடனும் கணவனை விட்டு தனியே வந்தால் எங்கே போவாள்? இத்தனை வயசுக்கு மேல் எந்த கம்பெனியில் வேலை கொடுப்பார்கள்? என்ன தான் விவாகரத்து ஜீவனாம்சம் என்று போனாலும் ரகுராமிடமிருந்து என்ன பெரிசாய் வந்து விடப் போகிறது...

மிஞ்சிப் போனால் ஐநூறு ரூபாய்...

இது மூன்று பேர் வாழ்க்கைக்குப் போதுமா? குழந்தைகள் படித்து ஆளாக வேண்டாமா...

இப்போதைக்கு அவள் வருவதானால்-சேலத்திலுள்ள அண்ணன் வீட்டுக்குத்தான் வரவேண்டும்.

ஏதோ ஒரு வாரம், பத்து நாள் என்றால் அண்ணி இவளை உட்கார வைத்து சோறு போடுவாள். அதற்குப் பிறகு...?

ஏற்கனவே மருமகள்-மாமியார் உறவே கம்பி மீது நடப்பது போலிருக்கிறது...

தனது மகள் தன்னிடம் அடைக்கலம் புகுவதற்காகக் கவலைப்படவில்லை அந்தத் தாய்...

தன் நிலைமையே சரியில்லாதப் போது இவள் வேறு வந்து, கசந்து முகர வேண்டாமே என்கிற ஆதங்கம்தான் காரணம்

விஜி புரிந்து கொண்டாள்...

ரகுராமின் பெற்றோரும் - மருமகள், மகனுடன் எப்படியாவது சேர்ந்து வாழவேண்டும் என்பதிலேயே குறியாக நிற்கிறார்கள்.

"பேசாம நான் உங்களோட கிராமத்துக்கு வந்துடறேன்."

Vennila

விஜி, மாமியாரிடம் கெஞ்சாதக் குறையாகச் சொல்ல... மாமியாரோ - மகனைப் பகைத்துக் கொள்ள விரும்பாதவளாய், மேலும் கீழும் பார்க்கிறாள்...

"என்னடா இவ இப்படிச் சொல்றா?"

மகனிடமே ஆலோசனைக் கேட்கிற அவளைப் பார்க்கையில், எரிச்சல் மண்டிக் கொண்டு வருகிறது அவளுக்கு.

ரகுராமோ-இந்தப் பக்கமே திரும்பாது எங்கேயோ மேல் பார்வை பார்த்துக் கொண்டு விட்டேற்றியாய் பதிலளிக்கிறான்.

"என்னைக் கேட்டா... நான் சொல்றதைச் சொல்லிட்டேன். இதுக்கு அப்புறம் அவ இஷ்டம். எனக்கும் நியாய, அநியாயம் தெரியும்...லதிகா என்னை நம்பி வந்துட்டா, அவளுக்கும் நான் மோசம் பண்ணக் கூடாது. இவ சொல்றதைக் கேட்டு இவளுக்காக நான் அவளை விரட்டி விட்டா அந்தப் பெண் பாவம் மாத்திரம் என்னை சும்மா விடுமா..."

ரகுராமின் தாய் மருமகளை சமையலறைக்கு அழைத்துப் போய் - நீள நீளமாய் புத்தி சொல்கிறாள்.

"இத்தனை நாளும் இல்லாம, அவன் அவளைக் கொண்டு வந்து வச்சிட்டிருக்கான்னா - உன்கிட்ட என்ன குறையிருக்குங்கறதை நீ யோசிச்சுப் பார்க்கணும்..."

"அவ அழகுல இவன் மயங்கிட்டான்னா நீ, அவன் மனசுக்கு ஏத்தாப்பல டிரஸ் பண்ணிட்டு அவனை சந்தோஷப் படுத்தலையின்னு அர்த்தம்..."

அவமானம் தாள முடியாத விஜி, முகம் சிவக்க கேட்கிறாள்.

"இதைச் சொல்ல உங்களுக்கு வெட்கமாயில்லையா..."

"என்ன சொல்றே நீ?"

"பேசாமே என்ன... அலங்காரமா டிரஸ் பண்ணிட்டுத் தான் புருஷனை, கைக்குள்ள வச்சுக்க முடியும்னா... எனக்



கும் பணத்துக்கு உடம்பை விக்கறவளுக்கும் என்ன வித்தியாசம்? எத்தனை நாளைக்கு இப்படி, விட்டுட்டு ஓடற மனுஷனை இழுத்துப் பிடிச்சு வச்சுக்க முடியும்னு நினைக்கறீங்க. இப்ப மாமாவை நீங்க அப்படியா பிடிச்சு வச்சிருக்கீங்க... இல்லே இதே வார்த்தைய-இந்தப் பக்கம் திருப்பிப் போட்டுப் பாருங்க... உங்க பிள்ளையோட அழகு மாத்திரம் எத்தனை நாளைக்கு நிரந்தரம்? இவருக்கு தலை நரைச்சதுன்ன-நான் வேற ஒருத்தனை தேடிட்டு..."

- சொல்லி முடிக்கவில்லை...

விஜியின் அம்மா, அவளை அடிக்கவே வந்து விட்டாள்.

"கோபம் வந்தா-என்ன பேசறதுன்னு ஒரு விதிமுறை கிடையாதா?"

ரகுராமின் தாய் நொடிக்கிறாள்.

"இப்படித்தான் அவன் கிட்டயும் பேசியிருப்பா... அதான் அவன் இப்படி மாறிட்டான். இல்லையின்னா, குலத்துல இல்லாம, குடும்பத்துல இல்லாம இவனுக்கு மாத்திரம் ஏன் இப்படி தோணணுமாம்?"

எல்லாம்... எல்லாமே இரண்டு-நாள் கலாட்டாவோடு சரி...

விஜயாவின் அண்ணன் வந்து தங்கை புருஷனின் தோள் மீது கை போட்டு ரொம்பவும் சிநேகமாய் சொல்வது போலச் சொல்லி விட்டு அம்மாவை அழைத்துக் கொண்டு போகிறான்.

"மாப்பிள்ளே உங்களுக்கு என்ன வருத்தமானாலும், என் கிட்டச் சொல்லுங்க. நான், அவ கிட்டச் சொல்லி திருத்திக்கச் சொல்றேன். அதை விட்டுட்டு - இதெல்லாம் நமக்கு நல்லாயில்லை..."



Vennila

"என்ன பண்றது— ஏதோ சிக்கல்லே மாட்டிட்டேன். எனக்காக, என்னோட நியாயமான போக்குக்காக உங்க தங்கை பெருமைப் படணும்... புதுசா வந்தவளுக்காக-நான், இவளையோ குழந்தைகளையோ வீட்டை விட்டு விரட்டி விட்டேனா... கஷ்டமோ நஷ்டமோ-ரெண்டையும் சமாளிக்கறேன்னுதானே சொல்றேன். இவளா, தனியாப் போறேன்னு சொன்னா அதுக்கு நான் என்ன செய்ய முடியும்?"

"வாஸ்தவம். நீங்க சொல்றது, ஹன்ட்ரெட் பர்ஸண்ட் கரெக்ட். என்ன இருந்தாலும் லேடீஸ்ஸுக்கு எமோஷனல் அதிகம். நம்ம பொறுமையும், நிதானமும் அவங்களுக்கு வராது...

இப்படிச் சொன்னவன், தங்கையிடம் நேரில் ஆறுதலாய் ஒரு வார்த்தை கூடச் சொல்லாமல் அம்மாவிடம் சொல்வது போல இவளுக்கு அறிவுரை வேறு வழங்கினான்.

"அம்மா, மாப்பிள்ளை முழு மனசோட இதைச் செய்யலை, அவரே ஏதோ சிக்கல்லே மாட்டிட்ட மாதிரி ஃபீல் பண்றாரு... ஆம்பிளைங்க வாழ்க்கையில இதெல்லாம் சகஜம். வெந்த புண்ணுல வேலைப் பாய்ச்சற மாதிரி-உன் பொண்ணு வேற அவரை வார்த்தையால நோகடிக்க வேண்டாம்னு சொல்லு... கொஞ்ச நாளாச்சுன்னா எல்லாம் சரியாயிடும்.."

இவன் எதைச் சரியாகி விடும் என்று சொல்கிறான்?

இப்படி ஒரு புருஷனை இன்னொருத்தியுடன் பகிர்ந்து கொள்வதைச் சொல்கிறானா...

இல்லை-நாளடைவில் இன்னும் எத்தனை இடி வந்தாலும், தங்கையால் தாங்கிக் கொள்ள முடியும் என்று தைரியம் சொல்கிறானா...



இந்தப் பாசமிருந்த அண்ணன், ஊருக்குப் போன மறுநாளே-ரகுராமன் தன் பெற்றோரை ரயிலேற்றி விட்டு வருகிறான்.

"நீதான் சமர்த்தாயிருக்கணும்..."

மாமனார், கிளம்பும் போது ஒரேயொரு வார்த்தையைத் தேடிப் பிடித்து சொன்னார்; அவ்வளவுதான்.

இத்தனை வருஷமாக வாழ்ந்த வீடும், பழகிய புருஷனும் திடீரென அந்நியப் பட்டுப் போனாற் போல உணர்கிறாள் அவள்.

அது என்னவோ தனக்குப் பாதுகாப்பே இல்லாத இடம் போல...

ரகுராம்-தனது தினசரி அட்டவணையை தன் போக்குப்படி மாற்றியமைத்துக் கொள்கிறான்.

காலையில் சாப்பாடு இங்கே... இரவு உணவு வேளச்சேரியில்.

விஜயாவை சமாதானப் படுத்தும் விதத்திலும், குழந்தைகளின் பிரமையைப் போக்குவதற்காகவும் வீட்டில் கலர் டி. வி. யும், வீடியோவும் வாங்கிப் போடுகிறான்.

குழந்தைகளை வேண்டுமானால் ஏமாற்றலாம். ஆனால் பெண்டாட்டி ..

விஜயா, தனக்கென்று தனி வாழ்க்கை வேண்டுமென்பதற்காகவே நாலைந்து சமூக சேவை மன்றங்களுக்கு-பகல் நேரங்களில் போய் பார்த்து தன் பிரச்னையை விளக்குகிறாள்.

எல்லோரும் ஒன்றையே சொன்னார்கள்.

"நீங்க நேரே போய்-உங்க ஹஸ்பெண்ட் வேலை செய்யற ஆபீஸ்லே சொல்லுங்க. அவளும் அங்கேதானே வேலை பார்க்கறா. அரசு வேலையில இருக்கறவங்க இந்த மாதிரி முறை தவறி நடந்துகிட்டா முதல்ல சீட்டைக்

Vennila

[illegible]

"என்ன..."

[illegible]

பொங்குகிற பால், தெளித்த நீர் போல அடங்கிப் போகிறாள் அவள்.

"[illegible] அவள் [illegible]"

அவள், வீட்டுக்குப் புறப்பட எழுந்து நின்ற போது அவள், லதிகாவுடன் [illegible] வர...

விஜயாவைப் பார்த்ததும் அவள் நடுக்க நடந்து...

"ஆ... விஜீம என்னம்மா, குழந்தைகளுக்கு [illegible] உடம்புக்கு..."

"......"

"சொல்லேன், எனக்கு [illegible]? [illegible] இருக்கா... என்ன ஆச்சு, எதுக்காக அழுறே... விஜி... விஜிம்மா..."

அவள் எதுவுமே பேசாமல் அழ-அவள் ஆபீஸ் பியூனை விட்டு, காபி வாங்கி வரச் சொல்லுகிறாள்.

"லதிகா... இன்னைக்கு மட்டும் நீ தனியா வீட்டுக்குப் போகணும். நான் விஜியோடப் போய், அவளை வீட்டுல விட்டுட்டு வரேன். அவ சுத்தினக் கூட என்னால தாங்கிக்க முடியும்... அழுதா-எனக்கு எதுவுமே ஓடாது..."

லதிகா-இதற்குப் பதிலே பேசாது இவளை வெறித்து பார்த்தபடி நிற்கிறாள்.

மிக உரிமையுடன் சகு, நாலு பேரெதிரில் விஜயாவின் கையைப் பிடிக்க, அவள் உதறி விட்டு வாசலை நோக்கி நடக்கிறாள்.

"விஜயா... விஜி... உடம்பு ஏதாவது பண்றதா... இப்படி எதுவுமே பேசாமப் போனா..."

அவள், நின்று-ரத்தினச் சுருக்கமாய், ஒரே வார்த்தையில் சொல்லி விட்டு நகருகிறாள்.

"பேச எதுவுமே இல்லே..."

அவள், தனியாகவே வீடு வந்து சேருகிறாள்...

ரகுராம்-லதிகாவுடன் வாழ ஆரம்பித்து ஆறு மாத காலம்..

பல்லைக் கடித்துக் கொண்டு தனது பழைய சர்டிபிகேட்டுகளை எல்லாம் தேடி எடுத்து, பத்திரிகைகளைப் பார்த்து - ஏதேதோ வேலைக்கு எல்லாம் இவள் மனு எழுதிப் போட்டு...

பெங்களூரில், ஒரு ரெடிமேட் உடைகள் தயாரிக்கும் நிறுவனத்திலிருந்து, இண்டர்வியூ இல்லாமலேயே வேலையில் சேர உத்தரவு வர...

அன்றுதான் நிம்மதியாக மூச்சு விடுகிறாள் அவள்...

ப்ரியாவிடமும், ஹரியிடமும் திரும்பத் திரும்பச் சொல்கிறாள்.

"நாம மூணு பேரும் பெங்களூர் போயிடலாம். அங்கே போய் இது மாதிரி கான்வென்ட்லே எல்லாம் படிக்க முடியாது. எந்தப் பள்ளிக் கூடத்துலப் படிச்சா என்ன... படிக்கற குழந்தைங்க எங்கே படிச்சாலும் நல்லாத்தான் படிப்பாங்க..."

"சரிம்மா... நீ அழாம இருந்தாப் போதும்..."

"நான் அழலையிடா கண்ணே... பத்து நாள் டயம் கொடுத்திருக்காங்க. முதல்லே, உங்க ஸ்கூல்லே இருந்து டி. ஸி. எல்லாம் வாங்கியாகணும். இன்னிக்கு சனிக்கிழமை இல்லே... அப்பா வருவார். வந்தவுடனே சொல்லப் போறேன். நீங்க ரெண்டு பேரும்-எங்களுக்குள்ள என்ன சண்டை வந்தாலும் பயப்படாம இருக்கணும்."

"நான் வேணுமானா, அப்பாவோட சண்டை போடறேம்மா..."



ஆறு வயது ஹரி, இப்படிச் சொன்னதும், அவனை அணைத்து, உச்சி முகருகிறாள் அவள்.

"என் கண்ணே..."

ஆனால் —

மாலை மூன்று மணிக்கு வர வேண்டிய ரகுராம் இரவு பத்து மணிக்கு வந்து, காலிங் பெல்லை அழுத்துகிறான்.

லதிகா வந்த பிறகு - அவன் இரவில் இங்கே வருவதே இல்லை.

காலையில் வருவான். இல்லாவிட்டால் மாலையில் ஒரு நடை வந்து, என்ன வேணும் என்று எட்டிப் பார்த்து விட்டுப் போவான்.

இரவில் வருவது அதுதான் முதல் முறை.

கதவைத் திறந்தவள் - அவனது கோலத்தைக் கண்டதும் விக்கித்துப் போய்விட்டாள்.

அழுது அழுது வீங்கினாற் போல முகம். ஜிவுஜிவு என இருக்கிறது. 'இவருக்கு பெண்டாட்டிய அழவைக்கத் தானே தெரியும்? இவருக்கே அழுகை வருமா என்ன...'

அவளது எண்ண ஓட்டத்தை - அவனது செய்கை தடை செய்கிறது. மனைவியின் இரு கைகளையும் பிடித்துக் கொண்டு 'ஓ' வென அழுகிறான் அவன்.

## 3

லதிகா, இந்த ஆறு மாதத்துக்குள்ளேயே ரகுராமின் சுபாவத்தைப் புரிந்து கொண்டு விட்டாள்.

இவன், இங்கே செய்தது போல-தனக்குத் தெரிந்த பெண்களுடன் மணிக்கணக்கில் பேசி, அவர்களுடன் நட்பு

Vennila

என்கிற பெயரில்-தப்பான உரிமை எடுத்துக் கொண்டு பேசுவதும், பழகுவதும் அவளுக்குப் பிடிக்க வில்லை.

அது மட்டுமில்லை. அவளதுப் பணக்காரப் பெற்றோர் அடிக்கடி பெண்ணை தனியே சந்தித்து-அவளது மனசு மாறும்படி அறிவுரை வழங்கியிருக்கிறார்கள்.

எல்லாவற்றையும் விட-ஆரம்பத்தில் இவன் மீதிருந்த மோகம், படிப்படியாகத் தணிய-இவனிடமிருந்த வெறுக்கத் தருந்த சுபாவங்கள் கண்ணில் பட ஆரம்பித்து விட்டது...

ஒரே மகளாய், செல்லமாய் வளர்ந்தவள். சின்ன விஷயத்துக்குக் கூட பொறுமையைக் கடைபிடித்துப் பழக்க மில்லை. மேலும் படித்தவள்.

லதிகாவின் தந்தைக்கு-மகள் இப்படி எவனோ ஒருத் தனுக்கு தாலி கட்டாதப் பெண்டாட்டியாக இருப்பது நாக் கைப் பிடுங்கிக் கொண்டு சாகலாம் போல இருக்கிறது...

"நீ அவனை விட்டுட்டு வா... இந்த வேலைகூட உனக்கு அவசியமில்லை. உன்னை அமெரிக்காவுக்கு அனுப்பிப் படிக்க வைக்கறேன். படிக்கப் பிடிக்கலையா. உன் பாட்டியோட வடக்கே போய், நம்ம சொந்த ஊருல நிம்மதியா கொஞ்ச நாள் இரு... உனக்கு கோடீஸ்வர மாப்பிள்ளையா-நம்ம குடும்ப கௌரவத்துக்கு தகுந்தாப் பல பார்த்து, கல்யாணம் செஞ்சு வைக்கறேன்..."

லதிகாவுக்கு அப்பா சொல்படி நடப்பதே-உத்தமம் என்று தோன்றி விட்டது.

மாலையில் அவனோடு வீடு திரும்புவதும், ஒன்றரை சாண் ஃபிளாட்டில், ராத்திரி அவனுக்காக காய்கறி வாங்கி சமைப்பதும் உலகத்திலேயே மிகச் சிரமமான வேலையாகத் தோன்றி விட்டது.

அடிக்கடி தன் பிறந்த வீட்டு மனிதர்களோடு போய் சேர்ந்து விடுவாள்.



ஆபீஸ் முடிந்து கிளம்பும் போதே-ரகுராமிடம் நறுக்குத் தெறித்தாற் போலச் சொல்லி விடுவாள்.

"இங்கே பார்... நான் வீட்டுக்கு வர மாட்டேன்... நீயே போய்க்க..."

இவள் தமிழே கொடுமை. அதுவும் — நாலுபேர் எதிரில் இவள். தன்னை, நீ, வா, போ—என்று அழைப்பது ரகுவிற்கு தாங்க முடியாத அவஸ்தை.

இதற்காகவே அவன், ஆபீசில் வைத்து அவளிடம் அதிகம் பேசமாட்டான். ஆங்கிலத்தில் பேசினால் உண்டு. அப்படியே பேசினாலும் அவன் திரும்பி ஏதாவது கேட் டால், அவள் பிலு பிலுவெனப் பிடித்துக் கொண்டு விடுவாள்.

"லதிகா... தினமும் சாயந்திரம் வீட்டைப் பூட்டிட்டுப் போயிட்டா நல்லாயில்லே ... சாப்பாட்டுக்கு ரொம்ப கஷ் டமா இருக்கு..."

"ஏன் கஷ்டப்படணும்?... நீ உன் ஒய்ஃப் வீட்டுக்கு போய்க்க..."

"அவ கிட்ட அத்தனை சண்டை போட்டுட்டு - ராத் திரி சாப்பாட்டுக்கும் போய் நிற்க எனக்கு சங்கடமாயிருக்கு. காலையில் சோறே - என்னமோ பலிபீடத்துக்கு சமைச்சு கொட்டறாப்பல கொட்டறா அவ..."

"அப்ப, உனக்கு எத்தனை கேர்ள் ஃபிரண்ட்ஸ் இருக்காங்க? போய் தினமும் ஒருத்தி வீட்டுல சாப்பிடு..."

ரகுராம் ஊசி மேல் நிற்பது போல உணர்ந்தான்.

ஒருநாள் இந்த சங்கடங்களுக்கு எல்லாம் முற்றுப் புள்ளியாக-அவள் அப்பா வந்தார். பெண்ணை 'கிளம்பு' என்றார். அவளும், தனது துணிமணிகளை எல்லாம் எடுத்துப் பெட்டியில வைத்துக் கொண்டு கிளம்பி விட்டாள்.

Vennila

“குட் பை, எனக்கு இந்த லைஃப் பிடிக்கலே. நான் கிளம்பறேன். நேத்திக்கே ஆபீஸ்லே - நான் வேலைய விட்டுடறதா எழுதிக் கொடுத்திட்டேன்...”

“அதெப்படி...என் கூட வாழ்ந்துட்டு...நீ எங்கே போனாலும் சந்தோஷமா வாழ முடியாது...”

ரகுராம் வானத்துக்கும் பூமிக்குமாய் குதிக்க-லதிகாவின் தந்தை-அவன் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை கொடுத்தார்.

வடக்கத்தி மனிதர். முரட்டு ஆசாமியும் கூட—அவர் கொடுத்த ஒரு அறையிலேயே ஆடிப் போய் விட்டான் அவன்.

“உன்னால என்ன செய்ய முடியுமோ-செஞ்சுக்க; போ...நான், போலீஸ்லே, என் பொண்ணை ‘கிட்நாப்’ பண்ணிட்டுப் போய் வச்சிருந்ததா புகார் கொடுப்பேன். ஏற்கனவே கல்யாணமான ஆளு. புள்ளை குட்டிக்காரன் வேற. அனாவசியமா ஜெயிலுக்குப் போக ஆசைப் படாதே !”

அசந்து போய் விட்டான் அவன்.

“ஏதோ-அவளும் சம்பாதிக்கிற தைரியத்தில் வீட்டிற்கு-மாதத் தவணையில் ஏகப்பட்ட சாமான்களை வாங்கிச் சேர்த்து விட்டான்.

அவள், தகப்பனுடன் கிளம்பிய போது-அவன் தயக்கத்துடன் கேட்டான்.

“இந்த வீட்டுக்கு அட்வான்ஸ், இந்த சாமான் எல்லாத்தையும் வாங்கிப் போட்டதுக்குப் பணம்...இதெல்லாம் யார் கொடுப்பாங்க?”

அவள் திரும்பிப் பார்த்து, முகத்திலடித்தாற் போலச் சொன்னாள்.



“இதைக் கேட்க உனக்கு வெட்கமாயில்லே...உன் கூட ஆறுமாசம் இருந்ததுக்கு நீதான் எனக்குப் பணம் கொடுக்கணும்...”

அவள் போய் விட்டாள்...

இவன், எல்லாவற்றையும் விற்று-கிடைத்த பணத்தில்-வாங்கிய கடனில் கொஞ்சத்தை அடைத்து விட்டு-மறுபடியும் விஜயாவின் கரத்தைப் பிடித்து கொண்டு அழ வந்து விட்டான்...

“என்னை மன்னிச்சுடு விஜி....அவ கூடப் போனதுல எனக்கு நல்ல பாடம் கிடைச்சிடுத்து இனிமே, உன்னையோ, குழந்தைங்களையோ விட்டுட்டு நான் எங்கேயும் போக மாட்டேன்...உன்னோட நல்ல மனசுக்கு-நான் செஞ்ச துரோகத்துக்கு, எனக்கு மன்னிப்பே கிடையாதுன்னு தெரியும். இருந்தாலும், இந்த ரெண்டு கையையும், உன்னோடக் காலா நினைச்சுட்டு..”

“ஐயய்யோ, என்னங்க இது ..”

விஜயா, பதறிப் போய் விட்டாள்...

அந்தக் கணமே, பெங்களூருக்குப் போய் வேலையில் சேர வேண்டிய நினைப்பு-பஞ்சு பஞ்சாய் போகிறது...

ப்ரியாவும், ஹரியும்-அம்மா-அப்பாவிற்கு நடுவில் எப்பொழுது சண்டை ஆரம்பிக்கப் போகிறதோ என்று இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தவர்கள், அப்பா-அம்மாவின் தோளில் முகம் புதைத்து அழுவதைக் கண்டதும் திகைத்து நிற்கிறார்கள்.

ஹரி, மெள்ள அக்காவைச் சுரண்டுகிறான்.

“அப்பா, சண்டையில தோத்துப் போயிட்டாரா...ஏன் அழறார்...”

“தெரியலே...கொஞ்ச நேரம் தொண தொணக்காம சும்மாயிரு...”

Vennila

ப்ரியா, பெரிய மனுஷி போல, அவனை அதட்டி விட்டு-அம்மாவையே கவலையுடன் பார்க்கிறாள்.

அன்றிரவு -

அம்மா, அப்பாவுக்கும் சேர்த்து, படுக்கையறையில் - மெத்தை தலையணைகளை ஒழுங்குபடுத்திப் போடும் போது - ரகசியமாய் கேட்கிறாள்.

"அம்மா... நாம, பெங்களூருக்குப் போகப் போறதில் லையா?"

"இல்லையடி கண்ணு. நம்ம அப்பா, திரும்பி நம்ம கிட் டயே வந்துட்டார். இனிமே, நாம எங்கேயும் போக வேண்டாம்..."

குழந்தைகளுக்குப் புரியா விட்டாலும் - அம்மாவின் சந் தோஷம், அவர்களையும் தொற்றிக் கொள்கிறது.

மறுநாளே, விஜயா - அம்மாவிற்கு - இந்த நல்ல செய் தியைத் தெரிவித்து - பக்கம் பக்கமாய் கடிதம் எழுது கிறாள்.

"...தான் செஞ்சது தப்புன்னு புரிஞ்சு, அவர் திரும்பி வர்ற சமயத்துல - என்னாலே, கோபப்பட முடியலே... அவர், குழந்தை மாதிரி அழுதப்ப நான், நிலைகுலைஞ்சு போயிட்டேன்...எது எப்படியோ... உன் மாப்பிள்ளைக்கு நல்ல புத்தியக் கொடுத்ததுக்கு நம்ம ஊர் மாரியம்மனுக்கு ஒரு பொங்கல் வைக்கணும். திருப்பதிக்கு, குடும்பத்தோட, படியேறி வர்றேன்னு நேர்ந்துட்டிருக்கேன். இந்த நல்ல விஷயத்தை-அண்ணா, அண்ணி ரெண்டு பேர் கிட்டயும் சொல்லு..."

குடும்பத்தில் - ஒரு சுமுகமானச் சூழ்நிலை நிலவத் தொடங்கிய பின்-அது வரையில் ஒதுங்கியே இருந்த இரண்டு பக்கத்துக் குடும்பங்களும் அடிக்கடி வந்து போகத் தொடங்க...



"இந்தப் பக்கம் ஆபீஸ் வேலையா வந்தேன்; அப் படியே உன்னையும், குழந்தைகளையும் பார்த்துட்டுப் போகல்லையின்னா-உங்க அண்ணி, என்னை சும்மா விடுவாளா...இல்லே, நீதான் சும்மாயிருப்பியா...அதான் வந்துட்டேன்.."

இப்படி, அவள் அண்ணா வந்து, சகஜமாய் பழகி, ரகுராமுடன் சேர்ந்து உட்கார்ந்து அரட்டையடித்து கொண்டே சாப்பிட்டு...

"இந்த தீபாவளிக்கு, அவனை நாலஞ்சு நாள் லீவு எடுக்கச் சொல்லு... குழந்தைகளோட ரெண்டு பேருமா, கிராமத்துல வந்து, எங்க கூட சேர்ந்த மாதிரி இருந்துட் டுப் போங்க... எங்களுக்கும் வயசாச்சு... உங்களையெல் லாம் பார்க்கணும் போல இருக்கு..."

இப்படி ரகுராமின் தாய், கடிதத்துக்கு மேல் கடிதம் போட்டு-அவர்களுக்கு அன்புத் தொல்லை கொடுக்கவும்...

"நான், அப்பவே இவ கிட்ட என்ன சொன்னேன்; கேளு, விஜயாவோடப் பொறுமைக்கும்... நல்ல மனசுக்கும் கண்டிப்பா-எல்லாம் நல்லபடியா முடியும்னு சொன்னேனா, இல்லையா-ன்னு கேளு...."

அன்றைக்கு வார்த்தை வராமல்-ஒற்றை வார்த்தை யில், இவனை சமர்த்தாயிருக்கும் படி உபதேசித்து விட் டுப்போன மாமனார்-அவள் முகத்துக்கு எதிரிலேயே பாராட்டவும்...

எல்லாமே நன்றாகத் தானிருக்கிறது.

விஜயாவுக்கு கூட, தான், கணவனின் விஷயத்தில் அன்றைக்கு இன்னும் கொஞ்சம் பக்குவமாய் நடந்து கொண்டிருக்கலாமோ-என்று தோன்றுகிறது....

இரண்டாவது வீடு எடுத்ததால்-ஏற்பட்டிருந்த கடனை அடைக்க, தனது நகைகள் அத்தனையையும் கழற்றிக் கொடுக்கிறாள் அவள்.

Vennila

"விஜி"

"எதுக்காக கண் கலங்கறீங்க? ஆபத்து சமயத்துல நமக்கு உதவாத நகைங்க, உடம்புக்குச் சுமையா இருக்கறதுல என்ன லாபம்—முதல்லே போய், அந்தக் கடனையெல்லாம் அடைச்சிட்டு வாங்க..."

"இதெல்லாம் அப்படியே வச்சிருந்தா, நாளைக்கு ப்ரியாவுக்குப் போடலாம். என்னால குந்துமணித் தங்கம் வாங்க முடியலையின்னாலும், குறைஞ்ச பட்சம் உங்க அம்மா போட்ட நகைகளையாவதுத் தொடாம இருக்கலாம்னு பார்த்தேன்..."

"ஒழுங்குதான். போங்க...இப்ப என்ன—ப்ரியாவுக்கு பதினொரு வயசுதானே ஆறது...அவ கல்யாணத்துக்கு நிற்கறதுக்குள்ளே-நீங்க எத்தனையோ வாங்கிடலாம், எனக்கு உங்க துணை இருந்தாப் போதும். கஞ்சியோ, கூழோ, நாலு சுவத்துக்குள்ளே-சிக்கனமா குடித்தனம் செஞ்சு, நானே வருஷத்துக்கு ரெண்டு மூணு பவுனா—சேர்த்திடறேன் பாருங்க!"

அவன், சொன்னதுடன் நிற்கவில்லை. அப்படியே செய்தும் காட்டுகிறாள்.

ரகுராம் - பழைய ரகுராம்தானா என்று மூக்கில் விரலை வைக்கும் படியாக மாறி விட்டான்...

சுத்தமாய் – விஜயாவைத் தவிர – வேறு பெண்களுடன் பேச்சுவார்த்தை கூட கிடையாது...

விடிகாலையில் எழுந்து, பச்சைத் தண்ணீரில் குளியல் ...சாமி படத்துக்கு முன்னால் உட்கார்ந்து கணிசமாய் ஒரு மணி நேர பூஜை...

பக்கத்து வீடுகளிலிருந்து, வயதானப் பெண்மணி வந்தால் கூட, கையிலிருக்கிற வேலையை அப்படியே போட்டு விட்டு விழுந்தடித்துக் கொண்டு விஜயாவைத் தேடி வருவான்.



"விஜி, யாரோ வந்திருக்காங்க... என்னன்னு கேளு. போ—"

"ஐயோ—பக்கத்து வீட்டு அம்மாதான்... நான் சோப்புக் கையா இருக்கேன் - இப்பத்தான் வந்து, எல்லாத்தையும் துவைச்சு உலர்த்தலாம்னு உட்கார்ந்தேன். நீங்கதான் என்னன்னு கேளுங்களேன்—"

"நீ நகரு – துணிங்களுக்கு நான் சோப் போடறேன், கையக் கழுவிட்டுப் போய், அவங்களை நீயே விசாரிச்சு அனுப்பு—போ..."

அப்படியிருந்தவன் ஒரேடியாய் எப்படி - தலைகீழாய் மாற முடிந்தது - என்று விஜயாவுக்கே உள்ளூர ஆச்சரியமாகத்தான் இருந்தது.

ஆனாலும் பெருமையாக இருந்தது.

"எப்படியோ மாறி விட்டார்...இனிமேலும் பழசைப் பத்தியே நினைச்சு, நினைச்சு - அந்தக் கண்ணோட்டத்தோடயே அவரைப் பார்க்கக் கூடாது..."

ரகுராம் - இலக்கியம், கவிதை, சினிமா - இது பற்றிய விவாதங்கள், அத்தனையையும் ஒரே உதறலாக உதறி விட்டு - முழு மூச்சாய், பஜனை, ஆன்மீகக் கூட்டம் என்று கிளம்பி விட்டான்.

அலுவலக நண்பர்களே, அவனை கலாட்டா செய்ய ஆரம்பித்தனர்.

"இது என்னடா வேஷம்..."

"..."

"டேய், ஆபீசே இன்னிக்கு, அவங்கவங்க குடும்பத்தோட சினிமாவுக்குப் போக முடிவு செஞ்சிருக்கு... நீயும், உன் ஃபேமிலிய அழைச்சிட்டு வா—"

"நான் வீட்டுல சொல்றேன். அவளும், குழந்தைகளும் ஆசைப்பட்டா – அனுப்பி வைக்கிறேன். பத்திரமா

Vennila

அழைச்சிட்டுப் போய், கொண்டு வந்து விடுங்க. என்னைத் தொந்திரவு பண்ணாதீங்க.. இன்னிக்கு ஒரு சுவாமிஜி லெக்சர் இருக்கு. கேட்க போகணும்...''

''லதிகா போனதுல மூளை கலங்கிப் போயிடுத்தா உனக்கு?''

இப்படிக் கேட்டால் மாத்திரம். அவனுக்கு முகம் சிவந்து போய் விடும். கடுப்புடன் சொல்வான்.

''நானே, பழசை மறக்க முயற்சிக்கறப்ப ஏண்டா என் வயித்தெரிச்சலைக் கொட்டிக்கறீங்க. சினிமாவுக்கெல்லாம், நான் வரல்லையின்னா - விடுங்களேன்!''

''பரவாயில்லை...உன் முகத்துக்கு, கிருஷ்ணன் வேஷம் போட்டாலும் பொருந்தும்; பரசுராமர் வேஷம் போட்டாலும் பொருந்தும். இந்த லேசானத் தாடியும், குங்குமப் பொட்டும்கூட, உனக்கு களையாத்தான் இருக்கு...''

அவன், மௌனமாய் நகருவான்.

சரியாய் மூன்று வருஷங்கள்...விஜயா, எந்தவொரு பிரச்னையும் இல்லாமல் நிம்மதியாகத் தான் இருக்கிறாள்...

எதிர் வீட்டுக்குப் புதுசாய் குடித்தனம் வரும் வரையில்...

எதிர் வீட்டுக்குப் புதுசாய் குடித்தனம் வருவதை - எல்லோரையும் போல, விஜயாவும் ஆவலோடு ஜன்னல் வழியாகப் பார்த்துக் கொண்டு தான் இருந்தாள்.

''உங்க கிட்ட சுத்தியல் இருக்குமா ...''

கேட்டுக் கொண்டு வந்த பெண்ணுக்கு சுமார் முப்பத்தைந்து வயசிருக்கும். காது, மூக்கில் எல்லாம் வைரம் .. சிரித்த முகம். அந்தக் காலப்பாணியில் கொஞ்சமும், இந்த நாளைய நாகரீகம் கொஞ்சமும், கலந்து இருந்தது அவளிடம்.



நெற்றியில் அளவுக்கு மீறிய பொட்டு. அதே சமயத்தில் மெல்லிய ஷிபான் சேலை... முகத்திலும் மஞ்சள் பூச்சு-சற்று மிகையாகவே... சுருண்ட தலைமுடி-அடர்ந்து விரிந்து, முதுகையே மறைத்தபடி...

''எல்லாச் சாமானும் இருக்கு... சமயம் பார்த்து இரும்பு சாமான்கள் வச்சிருக்கற பெட்டிச் சாவிய என் தம்பி தொலைச்சிட்டான். வீடு மாத்தறதுனாலே எனக்கு இதுனாலேயே குலை நடுக்கம்...''

அவள் சிரித்தபடியே கூற, விஜயா உள்ளே ஓடிப்போய், சுத்தியலைத் தேடி எடுத்துக் கொண்டு வருகிறாள்.

''தாங்க்ஸ்... அரை மணியில-என் தம்பி கிட்ட கொடுத்தனுப்பறேன்...''

அவள் போய், வெகு நேரம் வரையிலும் நாசிக்கு இதமான செண்ட் வாசனை, அந்தக் கூடத்தில் சூழ்ந்திருக்க-

''ஏது ஊதுவத்தி வாசனை... 'கம்'முனு—புதுசா ஏதாவது வாங்கினியா என்ன...''

குளித்து விட்டு வந்த ரகுராம், தலையைத் துவட்டியபடியே கேட்கிறான்.

''ஊதுவத்தி வாசனை இல்லே—எதிர் வீட்டுக்கு புதுசாக் குடித்தனம் வந்திருக்காங்க... அந்த வீட்டுப் பொண்ணு சுத்தியல் கேட்டு வந்தா ... அவ போட்டிருக்கற செண்ட்டோ, பவுடரோ...இந்த வாசனை வீசறது...''

ரகுராம்-முகத்தில் எந்த வித உணர்ச்சியும் இல்லை... நேரே சாமிப்படத்துக்கு முன்னால்-விளக்கை ஏற்றி வைத்து விட்டுச் சொல்கிறான்.

''விஜி, சாம்பிராணிக்கு கொஞ்சம் தணல் கொண்டு வா..''



Vennila

அடுத்த சில நிமிஷங்களில் சாம்பிராணிப் புகை மணத்தில்-செண்ட் வாசனை கரைந்தே போகிறது...

சுத்தியலை, அவள் தம்பி கொண்டு வந்து கொடுக்கிறான்.

அது என்னவோ, முதல் பார்வையிலேயே அந்த வாலிபனை விஜயாவுக்குப் பிடிக்கவில்லை.

'தம்பி தம்பி'—என்று எதிர் வீட்டுக்காரி சொன்ன போது, விஜயா-ஒரு பத்து, பதினைந்து வயசு சிறுவனை கற்பனை செய்திருந்தாள்.

இவனுக்கு முப்பது வயசாவது இருக்கும். மடித்து கட்டிய லுங்கியும், சிவப்பேறிய கண்களுமாய் இருந்தான்... கழுத்தில், கண்டு விரல் பருமனுக்கு மைனர் செயின்...

சுத்தியலைக் கொடுத்தவன், விஜயாவின் கையில் தன் விரல் படக் கொடுக்க, அவள் 'சட்'டெனக் கையை இழுத்துக் கொள்கிறாள்.

சுத்தியல் கீழே விழுந்து, அவளதுக் கால் கண்டு விரலைப் பதம் பார்க்கிறது...

"அடடா...காலுலே விழுந்ததா..."

அவன் குனிய, அவள் சமையலறைப் பக்கம் விரைகிறாள்... அப்படியும் அவன் பார்வை, பள்ளிக்கு கிளம்பிக் கொண்டிருந்த ப்ரியாவின் மீது...

'சனியன் பிடிச்சவன்; சுத்தியலைத்தான் கொடுத்தாச்சே... போய் தொலைய வேண்டியதுதானே...'

அவள் எரிச்சலுடன் தனக்குள் முனக-வந்தவன், ரகுராமைப் பார்த்து—என்னவோ ரொம்பவும்தான் பழகிய மாதிரி புன்னகைக்கிறான்.

"அப்ப நான் வரட்டுமா சார்?"

"சரி..."



ரகுராமின் இதழிலும் அவசரமாய் ஒரு சிரிப்பு-காடியையும் மீறி எட்டிப் பார்க்கிறது.

அவன் போன பின்பு, விஜயா-ரகுராமிற்கு சாப்பாடு பரிமாறிய படியே சொல்கிறாள்.

"வந்தவன் சுத்தியலை மரியாதையாக் கொடுத்திட்டுப் போக வேண்டியவன்தானே...ஆளை முழுங்கிடற மாதிரி அது என்ன பார்வை?"

"அப்படியா பார்த்தான்.. நல்லவனாச்சே!"

விஜயா-மென்ன, கணவனை திரும்பிப் பார்க்கிறாள்-அவனோ, குனிந்த தலையை உயர்த்தாமல், ஆவி பறக்கும் சாதத்தை விரலால் கிளறியபடியே இருக்கிறான்.

"இவனை உங்களுக்கு முன்னாலேயே தெரியுமா?"

"ம்...இப்படி பஜனை, கதா காலட்சேபத்துக்கு அம்மாவையும் அக்காவையும் அழைச்சிட்டு வருவான். பார்க்கத்தான் அப்படி ரவுடி மாதிரி இருக்கானே தவிர-குழந்தை மாதிரிப் பழகுவான்..நான்தான் எதிர் வீடு காலியானது. நீங்க வேணுமானாப் பாருங்க'-ன்னு இவன்கிட்டச் சொன்னேன். அப்புறம் மறந்தே போயிட்டேன்..."

சூடான சாதத்தின் மீது, விழுந்த வேகத்தில் உருகிய விழுது நெய்யைப் போல—

அவனது வார்த்தைகள்-அவளது இதயச் சூட்டில் மெள்ளக் கரைய...

சாப்பிட்டு முடிக்கும் வரையில்-அவள், கணவனிடம் பேசவில்லை..

'ஏதோ, பிறத்தியாருக்கு உதவற நோக்கத்துல-வீடு காலியா இருக்குன்னு சொல்லியிருக்கார். எடுத்ததுக்கெல்லாம் எதுக்காக அசட்டுத் தனமாக் கவலைப்படணும்?'

Vennila

அவள் மனசைத் தேற்றிக் கொண்டாலும், அடுத்தடுத்து நேர்ந்த சம்பவங்கள் எதுவுமே – அமைதியைத் தரும்படியாக இல்லை!

## 4

சாருமதி... அதுதான் அவள் பெயர். அவளோ, அவள் தாய் கமலமோ-ஆன்மீக விஷயங்களில் பற்று கொண்டவர்கள் போலத் தெரியவில்லை.

இருந்தாலும்-பஜனையானாலும் சரி; சினிமாவானாலும் சரி...எதையும் விட்டு வைக்காமல் போய் வருகிறார்கள்...

ரஞ்சித்-அக்காவுக்கும், அம்மாவுக்கும் காவல். இவர்கள், எங்கே போனாலும், ஒரு டப்பா ஹெரால்டை அவன்தான் ஓட்டி வருவான்.

தாயார்க்காரி, தன் வீட்டு போர்டிகோவை விட்டு நகர மாட்டாள். பெண்தான், நி ஷத்துக்கு ஒரு தடவை. விஜயாவைத் தேடிக் கொண்டு ஓடி வருவாள்.

"விஜி...இங்கே பால் கார்டு எங்கே வாங்கணும்?"

"என் தம்பி-பிஸினஸ் விஷயமா இன்னும் ரெண்டு நாளுல சிங்கப்பூர் போறான். உங்களுக்கோ, ப்ரியாவுக்கோ ஏதாவது வேணுமானாச் சொல்லச் சொன்னான்... பதினஞ்சு நாளுல வந்துடுவான்..."

"சனிக்கிழமை தவறாம எங்க வீட்டுல பஜனை நடக்கும். வாங்களேன். ஒரு மாறுதலா இருக்கும். ப்ரியா அப்பாவுக்கு இந்த மாதிரி பஜனை, கூட்டம்னா ரொம்பப் பிடிக்கும் போல இருக்கே... அவரை அழைச்சிட்டு வாங்க..."

"எங்க அம்மா ரொம்பநாள் வரைக்கும் மலேசியா, சிங்கப்பூர்லே இருந்தவங்க. எதையுமே சின்ன அளவில, சிக்கனமான செய்யத் தெரியாது. நவராத்திரியின்னா



வீட்டுக்கு வர்ற ஒவ்வொரு பொம்பிளைக்கும் புடவை ரவிக்கை வாங்கிக் கொடுத்தாத்தான் ஆச்சுன்னு சண்டை போடுவாங்க.. அவங்களை சமாளிக்கறதே எனக்கும், தம்பிக்கும் பெரிய வேலையாப் போயிடும்..."

"விஜி.. வெங்காய சாம்பாருக்கு நீங்க என்னெல்லாம் அரைச்சு விடுவீங்க... தம்பி ரஞ்ஜித்துக்கு, உங்க வீட்டுல இருந்து வர்ற சாம்பார் வாசனைதான் ரொம்பப் பிடிக்குதாம். நான் கூட கேலி செஞ்சேன். பேசாம, அவங்க வீட்டுலேயே போய் சாப்பிடேன்னு..."

"என்னங்க...தீபாவளிக்காக ரேஷன்லே கூடுதல் சர்க்கரை போடறாங்களாமே...நீங்க வாங்கிட்டீங்களா? வாங்கலையின்னா சொல்லுங்க...தம்பி போறான். உங்க கார்டையும் கொடுத்தா வாங்கிட்டு வந்திடுவான்..."

இத்தனைக்கும் விஜயா, அதிகம் ஒட்டாமலேயேதான் பழகினாள்.

ரகுராமோ-தன்னைத் தேடி ரஞ்ஜித் வந்தால் மட்டும் பேசுவான்.

சாருமதி நின்ற இடத்தில் நிற்க மாட்டான். அவள் எத்தனை மணி நேரம் இங்கே வந்து அரட்டையடித்துக் கொண்டிருந்தாலும், உள் அறையிலிருந்து வெளியே வர மாட்டான்.

எப்பொழுதாவது சாருமதியும், அவனும்-நிலை வாசற்படியிலேயோ, ரேழியிலேயோ எதிரும் புதிருமாய் சந்திக்க நேரும்போது கூட, அவள் தான் அவனை விசாரிப்பாள்.

"சௌக்கியமா?"

"உம்..."

அவன், குனிந்தத் தலையை உயர்த்தாமல் பதிலளிப்பான்.

Vennila

அந்த வகையில் விஜயாவுக்கு நிம்மதி மட்டுமில்லை பெருமையாகக் கூட இருந்தது.

ஒருமுறை, விஜயாவே சாருமதியிடம் அவர்கள் குடும்பத்தைப் பற்றிக் கேட்கிறாள்.

"எங்கப்பா மலேயாவுல பெரிய பிசினஸ் மேன். எங்களை வளர்க்கறதுக்காக அம்மா, இங்கேயே தங்கிட்டாங்க. எனக்கு கல்யாணத்துக்காக தீவிர மாச் பார்த்தாங்க. இப்பக் கூட-எவனாவது கட்டிக்க முன் வந்தா-நூறு பவுன் நகையோட, என்னைத் தர, தயாரா இருக்காங்க..."

"என்னைக் கல்யாணம் செஞ்சுக்க நிறைய பேர் கியூவுல நிக்கறாங்க. ஆனா, என் மனசுக்குள்ள, புருஷன்னா இப்படித்தான் இருக்கணும்னு ஒரு புள்ளி போட்டு வச்சிட்டேன். அந்த சாயல் கூட இல்லாதவங்களை நான் எப்படி கட்டிக்க சம்மதிப்பேன்?"

"என்னால, தம்பியும் பிரும்மச்சாரியா இருக்கான்கறது தான் அம்மாவோடக் குறை... எனக்கு எந்த வித வருத்தமும் இல்லே. அவனுக்கு பிடிச்ச பொண்ணா அமைஞ்சா சரி...என்ன நீங்க சொல்றீங்க..."

"எனக்கு வர புருஷன் பெரிய படிப்பெல்லாம் படிச்சிருக்கணும்னு அவசியமில்லீங்க...அம்மாவும் நானும்-பஜனைக்கு கிளம்பினா, 'என்ன பஜனை, வீட்டோடக் கிட'ன்னு சொல்லக் கூடாது. பார்க்கப் போனா அவரும் எங்க கூட வந்தா நல்லாயிருக்கும்."

"இந்த நாளையில அப்படிப்பட்ட புருஷனே கிடையாதுன்னு சொல்றதுக்கில்லே.... ஏன், இப்ப உங்க வீட்டுக்காரர் இல்லையா?"

"நீங்க ரொம்பக் கொடுத்து வச்சவங்க. இந்த மாதிரி ஒரு புருஷன் கிடைக்க, நீங்க கொடுத்து வச்சிருக்கீங்க..."

விஜயா - இதற்குப் பதிலே சொல்ல மாட்டாள். ஒரு வித சங்கடத்துடன் வேலை இருப்பது போல நகருவாள்.



இதை விடவும் வெளியே சொல்ல முடியாத சங்கடம் - ரகுராம், காலையில் பூஜை முடித்து, கற்பூரம் காட்டுவதற்காக மணியடித்தால் - சாருமதி, எங்கிருந்தாலும் ஓடி வந்து இவர்கள் வீட்டு ஹாலில் நின்று விடுவாள்.

கற்பூரத்தை பக்தி சிரத்தையோடு ஒத்திக் கொண்டு ரகுராமனை ஓரக் கண்ணால் பார்த்தபடிச் சொல்லுவாள்.

"பரவாயில்லே, இந்த வீட்டுக்கு வந்ததுக்கு அப்புறம் பஜனை சத்தமும், மணிச் சத்தமுமா - மனசுக்கு நிறைஞ்சு இருக்கு. முன்னாலே இருந்த வீட்டுல எதிர்த்த மாதிரி சினிமாக்காரங்க, எப்பப் பார்த்தாலும் பத்து பேர் வந்துட்டு குடிச்சு, சத்தம் போட்டுட்டு இருப்பாங்க..."

விஜயா, ஜாடையாகக் கணவனின் முகத்தைப் பார்க்கிறாள்.

விருப்பு வெறுப்பே அற்ற முனிவரின் முகம் போல் இருக்கிறது...

விஜயா, நிம்மதியாய் பெருமூச்சு விடுகிறாள்...

ஆனால் - அந்த நிம்மதி ஆறு நாட்களுக்கு மேல் நிலைக்கவில்லை...

அன்று -

மாலையில் டிபனை முடித்து வைத்து விட்டு ரகுராம் வருவதற்குள் முகத்தைக் கழுவிக் கொண்டு வந்து விடலாம் என்று ஓடியவள், பாத்ரூமில் இருந்து டவலில் முகத்தைத் துடைத்தபடி வெளியே வந்தவள் - எதிர் வீட்டு வாசலில் தெரிந்த ஒரு மனிதரின் முதுகுப் புறத்தைக் கண்டதும் ஒரு கணம் ஸ்தம்பித்தாள்.

'இது என்ன அவரை மாதிரி இருக்கு...'

'ச்சீ...குரங்கு மனசே. சும்மாயிரேன்...அவங்க வீட்டுக்கு யாரோ வர்றாங்க...வர்றவனெல்லாம் உன் புருஷனா எதிர் வீட்டுக்கு யாருமே வரக்கூடாதா..."

Vennila

அவள், தலையைப் பின்னி, பொட்டு வைத்துக் கொண்டே மணியைப் பார்த்தாள்.

ஆறு—

சாதாரணமாய் ஐந்தரைக்கே வந்து விடும் ரகுராம். அன்றைக்குப் பார்த்து இன்னும் வரவில்லை....

ஹரி இரண்டு தடவை கேட்டு விட்டான்.

"ஏம்மா இன்னும் அப்பா வரல்லே?"

"ஆபீஸ்லே ஏதாவது வேலை இருக்கும்... இதோ வந்திடுவார்—"

அவள் சொல்லி முடிக்கவில்லை,

எதிர் வீட்டிலிருந்து வேகமாய் இறங்கி வருகிறான் ரகுராம்.

வாசலில் விஜயாவை எதிர்பார்க்கவில்லையாதலால் தடுமாறிப் போகிறான்.

விஜயா எதுவுமே கேட்கவில்லை. மௌனமாய் அவனைப் பின் தொடர்ந்து உள்ளே போகிறாள்...

"டிபன் சாப்பிட வர்றீங்களா..."

"...ம்...கொஞ்சமா—எதிர் வீட்டு ரஞ்ஜித் ஏதோ மலேயாவுலேயிருந்து பூஜை மண்யம் வாங்கிட்டு வந்திருக்கானாம்—என்னை வந்து, 'பாரு பாரு' ன்னு அறுத்திட்டே இருந்தான்...இப்ப ஆபீஸ்லேயிருந்து வர்றச்சே - வாசல்லேயே நின்னு என் கையைப் பிடிச்சு இழுத்திட்டுப் போயிட்டான்..."

"வீட்டுல குழந்தைங்க காத்திருக்கும். பெண்டாட்டி காத்திட்டிருப்பா. போய் டிபன் காபி சாப்பிடணும்னு சொல்லிட்டு நேரே வர வேண்டியதுதானே?"

விஜயாவின் குரலில், அவளையும் மீறி ஒரு வித எரிச்சல் கலக்க -

அவன், அவசர அவசரமாய் சொல்கிறான்.



"நான் சொல்லாமயா இருந்திருப்பேன்? சொன்னேனே... அந்த டிபனை நம்ம வீட்டுல சாப்பிடுங்க—உங்களை மாதிரி தெய்வ அனுக்ரகம் பெற்றவங்க எல்லாம் நம்ம வீட்டுல வந்து கை நனைக்கறதுங்கறது பெரிய விஷயம். அதுக்கு நாங்க கொடுத்து வச்சிருக்கணும்னு, ரஞ்ஜித்தோட அம்மா ரொம்பக் கெஞ்சிட்டாங்க... சில பேர் இப்படி பிரியம்கற பேருல நம்மை தொந்திரவு செய்யறச்சே-என்ன செய்யறதுன்னே புரியலே விஜி—"

"அப்ப டிபன்...."

"ராத்திரி சாப்பிடறேனே..."

அவன் குளித்து விட்டு மாலை பூஜைக்கு உட்கார ஏமாற்றத்துடன் வாசப்பக்கம் போய்-எதிர் வீட்டைப் பார்க்க-

அப்பொழுதுதான் தன் வழக்கமான டப்பா காரில் ரஞ்சித்தும், அவன் தாயாரும் வந்து இறங்குகிறார்கள்... பக்கத்து வீட்டு-வம்பு அம்புஜம், வாயை வைத்துக் கொண்டு சும்மாயிராமல்-சாருமதியின் தாயைப் பார்த்துக் கேட்கிறாள்.

"என்னங்க, அதிசயமா பொண்ணு இல்லாம வெளியிலப் போயிட்டு வர்றீங்க?"

"என்ன செய்யட்டும்? அவளானா - சினிமாவுக்கு வரல்லே, தலைய வலிக்குதுன்னு அடம் பிடிக்கறா இவனானா நீ வந்தாத்தான் ஆச்சு-ன்னு ஒத்தக் காலுல நிக்கறான்...சரி, தைலத்தைத் தடவிட்டுப் படு...மோடினி தானே போயிட்டு வந்துடறேன்னு சொல்லிட்டுக் கிளம்பிட்டேன்... படம் மூணு மணி நேரம். இப்பத்தான் விட்டான்...."

அடுத்த வீட்டுக்காரியிடம் இவ்வளவு பேசியதே அதிகம் என்பதுபோல—அந்தம்மாள் உள்ளே செல்ல.

Vennila

அப்புறம், அர்த்த புஷ்டியுடன் பக்கத்து வீட்டையும் ஒரு பார்வை பார்த்து விட்டு எதிர் வீட்டு வாசலில் நின்ற விஜயாவையும் பார்த்துப் புன்னகைக்கிறாள்.

விஜி, 'விருட்'டென உள்ளே வந்து விட்டாள் இதயம், அடுப்பிலேற்றிய உலையாய் கொதிக்கிறது.

சாருமதியின் தம்பி வாசலில் நின்று, தன்னை தரதர வென வீட்டுக்குள் இழுத்துக் கொண்டு போனதாகவும், அந்த அம்மாள், டிபனை வைத்துக் கொண்டு நின்றால் தான் ஆச்சு என்பது போல உபசரித்ததாகவும்...எத்தனை கதை சொன்னான்?

அப்படியானா...அப்படியானா...இவர் போன சமயத்துல அவங்க வீட்டுல அந்தக் கிழவியும் இல்லே—அந்தத் தடியனும் இல்லே...

இவ மட்டும்தான் இருந்திருக்கா.

இவ தனியா இருக்கற சமயத்துல, இவருக்கு அங்கே என்ன வேலை? கடவுளே...மறுபடியும் சோதனையா?

அன்றிரவு முழுக்கத் தூக்கமில்லை அவளுக்கு. புரண்டுப் புரண்டுப் படுக்கிறாள்.

அவனோ-எதுவுமே தெரியாதவன் போல நிம்மதியாகத் தூங்குகிறான்.

காலையில் வழக்கமான கலகலப்பு இல்லாமலேயே சமையல் நடக்கிறது...மணியோசை கேட்டதுமே – எங்கிருந்தோ சாருமதி ஓடி வருகிறாள்.

குழம்புக்குத் தாளித்துக் கொண்டிருந்த விஜயா வெளியே வரவும், சாருமதி கற்பூரத்தை ஒத்திக் கொண்டு ரகுராமைப் பார்த்து மெல்லியக் குரலில் விசாரிக்கவும் சரியாக இருக்கிறது.

"வீட்டுக்குத் தெரியுமா?"

"உம்..."



"ஏதாவது கேட்டாளா..."

"ஊம்ஹூ..."

"அப்ப இன்னிக்கு..."

"உம்..."

விஜயா, வியர்வை பெருகிய முகத்தை முந்தானையினால் துடைத்துக் கொண்டே வந்து, கற்பூரத்தைக் கண்களில் ஒற்றிக் கொள்கிறாள்.

"சாருமதீ..."

அவள் திடுக்கிட்டு விஜயாவைப் பார்க்கிறாள்,

"என்ன விஜி?"

"உங்க வீட்டுலேயும் சாமி இருக்குதில்லே?"

"உம். ஏன் கேட்கறீங்க?"

"அங்கே விளக்கேத்தி, மணியடிச்சு கும்பிட மாட்டியா... எங்க வீட்டு பூஜைக்கு இத்தனை ஆசையா வர்றே... உங்க வீட்டுலேயிருந்து மணிச் சத்தத்தையே காணுமே? ஏன்...?"

"அது வந்து... அது வந்து... பூஜையெல்லாம் ஆம்பிளைங்கதான் பண்ணணும்னு எங்க அம்மா சொல்லுவாங்க..."

"ஓ... அப்ப ரஞ்சித் ஆம்பிளை இல்லியா?"

சாருமதியின் முகம் அவமானத்தில் குழம்பிச் சிவக்கிறது... இருந்தாலும் சமாளித்துக் கொண்டு சொல்கிறாள்.

"அவனுக்கு எங்கே அத்தனை அக்கறை?"

"அப்ப உங்கம்மாவைப் பண்ணச் சொல்லு... அதை விட்டுட்டு எத்தனை நாள்தான் இங்கே ஓடி வருவே..."

ரகுராம், மனைவியின் தோளைத் தொட்டுத் திருப்பி, நிதானத்தை இழக்காமல் சொல்கிறான்.

"தெய்வம் எல்லாருக்கும் பொது விஜி...உன் வீட்டு சாமி, என் வீட்டு சாமின்னு சிறு பிள்ளைத்தனமாப் பார்க்கக் கூடாது!"

Vennila

"தெய்வம் மட்டும்தான் பொது. புருஷனில்லே, அதை நான் மறுபடியும் உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்பலே... சாமியில வேணுமானா-உன் வீட்டுச் சாமி, என் வீட்டுச் சாமியில்லையே தவிர-என் புருஷன் வேற, அவ புருஷன் வேறன்னு இருக்கறதுதான் எல்லாருக்கும் நல்லது..."

அவ்வளவுதான். சாருமதி, தன் வீட்டுக்கு அழுதபடி ஓடி விட்டாள்.

இந்த முறை ரகுராம் மனைவியை அடிக்கவில்லை... மாறாக முறைத்துப் பார்க்கிறான்.

"உன் மனசுல இன்னமும் அந்த சந்தேகம் போகலே இல்லே..."

"நேத்து சாயந்திரம் வரைக்கும் உங்களைத்தான் முழுசா நம்பிட்டிருந்தேன். என் கிட்ட, ரஞ்சித் வந்து என்னை இழுத்துட்டுப் போனான், அவங்க அம்மா டிபன் கொடுத்து உபசரிச்சாங்கன்னு பொய்தானே சொன்னீங்க?",

அவன் திடுக்கிடுகிறான்...

"அந்தம்மாவும் பிள்ளையும் மேடினி ஷோ பார்த்துட்டு வந்து - நீங்க இங்கே வந்ததுக்கு அப்புறமா வந்து இறங்கியிருக்காங்க. அது மட்டுமில்லே, அவங்க வீட்டுக்குப் பக்கத்து வீட்டு அம்புஜத்துக்கு நீங்க ரெண்டு பேரும் தனியா இருந்தது தெரிஞ்சிருக்கு .. பைத்தியம்; ஜடம், எனக்குத்தான் ஒண்ணும் தெரியலே!"

"இப்ப தெரிஞ்சுப் போச்சு இல்லை?"

"என்னது?"

அவள் படபடக்கும் இதயத்தைப் பிடித்தபடி கேட்கிறாள்.

"உனக்குத் தெரியாது. அவ, என் போன ஜென்மத்துப் பெண்டாட்டி..."

"என்ன பேத்தல் இது?"



"அன்னிக்கு சுவாமிஜி சொன்னதா - சாருமதியோட அம்மா சொன்னாங்க...கால சர்ப்ப தோஷத்தாலே இந்த ஜென்மத்துல தகுதியானப் புருஷன் கிடைக்காம அவ திண்டாடுவா. அவளுக்குப் போன ஜென்மத்துல புருஷனா இருந்தவன்தான் இங்கே வர்ற ரகுராம்னு சுவாமிஜி சொன்னாங்களாம். அதுலேயிருந்து அவ, தனக்கு கல்யாணமே வேண்டாம்னு பூஜை நேரத்துல கற்பூரம் ஒத்திக்க மட்டும் இங்கே ஓடி வர்றா... அவளையும் நீ விரட்டி அடிச்சிட்டே ... இப்ப என்ன, நான் அவ கூடவாப் போயிட்டேன்..."

"அதான் நேத்துப் போனீங்க...இன்னிக்கும் போகப் போறீங்க..."

"நாங்க ஆன்மீக விஷயம்தான் பேசறோம்.."

"ஆன்மாவைக் கொலை செஞ்சிட்டு என்ன ஆன்மீக விஷயம் பேச வேண்டிக் கிடக்கு - இது சரியில்லை. இனிமே அவ இங்கே வரக் கூடாது. நாம் உடனே வேற வீடு மாத்தணும்..."

ரகுராம் இதற்குப் பதில் சொல்வதற்குள் ரஞ்ஜித் வந்து நிற்கிறான்.

## 5

"என்ன ஆச்சு... சாருமதி அழுதுட்டு ஓடி வந்திருக்கா...என் தெய்வத்தைப் பார்க்கக் கூட எனக்கு அனுமதி இல்லையிங்களா..."

"நீ வா...நாம வெளியிலப் போய் பேசலாம். விஜி, நான் ரஞ்சித் கூடத்தான் போறேன் நீ வேற அழுது ரகளை செய்யாதே!"

ரகுராம், அவனை இழுத்துக்கொண்டு விடுவிடுவென வாசலுக்குப் போக-அந்த நேரம் பார்த்து எங்கேயோ

Vennila

போய் விட்டு ஓடி வந்த ப்ரியா, இடத்தை அடைத்த மாதிரி நடக்கும் ரஞ்சித்தின் மீது மோத...

அவன், கிடைத்த சந்தர்ப்பத்தை விட்டு விடாமல் அவளை இறுக்கிப் பிடித்து அணைத்து, கன்னத்தில் ஒரு முத்தம் தந்து விட்டுப் போகிறான்.

இந்த எதிர்பாராத நிகழ்ச்சியில் விஜயாதான் திகைத்து நின்றாள் எனில்-ரகுராமுமே விதிர் விதிர்த்துத்தான் போய் விட்டான்.

"ச்சீ...விடு!"

ப்ரியா அவன் கையை உதறித் தள்ளியபடி ஓடி வர கண்களில் அவமானம் தாளாமல் கண்ணீர் பளபளக்கிறது

"அம்மா...அந்த அங்கிளைப் பாரேன்..."

"ஏய், உன்னைத்தானே...கொஞ்சம் நில்லு...

ரகுராம், பதற்றத்துடன்-ரஞ்சித்தை விஜயாவிடமிருந்து காப்பாற்றும் வகையில் சொல்கிறான்.

"அவனுக்கு குழந்தைகளானா ரொம்பப் பிடிக்கும்... ஃபாரின் கன்ட்ரீஸ்லே இருந்து இருந்து - இதெல்லாம் சாதாரணமாப் போச்சு. தப்பா நினைச்சுக்காதே விஜி..."

"அப்ப இதை நீங்க தப்பா நினைக்கலையா?"

"அப்படிப் பார்த்தா-வாழ்க்கையில நடக்கற எல்லா விஷயங்களுமே தப்புதான் விஜி..."

அவன், ரஞ்சித்தின் தோள் மீது கை போட்டபடி போக, சற்று தூரம் சென்று திரும்பிய ரஞ்சித்–ப்ரியாவைப் பார்த்து கண்ணைச் சிமிட்டி விட்டு நகருகிறான்.

"அம்மா..."

ஓடி வந்து தாயின் மடி மீது விழுந்து அழுதப் பெண்ணை தேற்றத் தெரியாமல் தவிக்கிறாள் அவள்.

ஏதோ - இத்தனை நாளும் பிரச்னைகள் - அவள் வரையில்தான் வந்து போய் கொண்டிருந்தன. இப்



பொழுது பெற்ற மகளுக்கே - கணவனது நடத்தையினால் விபரீதம் வருமென, அவள் நினைக்கவே இல்லையே...

ப்ரியா என்ன - இன்னும் சின்னக் குழந்தையா...பதினாலு வயசாகிறது. பெரிய மனுஷியாகி ஒரு வருஷமாகிறது...திடீரென ஒரு மனிதனின் அணைப்பு-அவளை என்ன பாடு படுத்தியிருக்குமோ...

முத்தமிட்ட கன்னத்தை - சிறுமி - தேய்த்து தேய்த்துக் கழுவுகிறாள். அழுதழுது முகம் வீங்கி, சிவந்துப் போயிற்று...

"அது என்னமா அப்பா, அந்தப் பொறுக்கிக்குப் பரிஞ்சிட்டுப் பேசலாம். அவனை அடிச்சு நொறுக்க வேண்டாமா? அவன் எந்த சீமையிலப் படிச்சவனாயிருந்தாத்தான் என்ன ...ச்சீ. எனக்கு இந்த அப்பாவையே பிடிக்கலே..."

அன்றையப் பொழுது முழுக்க - யாருமே - ரகுராமுடன் பேசவில்லை. அவனும் இதைப் பற்றிக் கண்டு கொள்ளவில்லை.

விஜயாவிற்கு விரக்தியில் என்னென்னமோ தோன்றுகிறது...

இரவில் தூக்கத்தில் கூட ப்ரியா அழுகிறாள்.

அப்பொழுதுதான் ரகுராம், மனைவியைக் கேட்கிறான்.

"ஏன் அழறா அவ?"

"அவ பெரியவளாகி ஒரு வருஷமாறது...நினைவிருக்கு இல்லே?"

"தெரியாம என்ன...அதான் பட்டுப் பாவாடை தாவணி, எல்லாம் வாங்கினதே..."

"அதெல்லாம் வாங்கினது பெரிசில்லே, இனிமேல்தான் பெண் குழந்தைகளை பத்திரமாப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு பெத்தவங்களுக்கு அதிகமாயிருக்கு."

"தூங்க வேண்டிய நேரத்துல இது என்ன உபதேசம்?"

Vennila

"காலையில அந்தத் தடியன் அப்படி செஞ்சவுடனே-பெத்த தகப்பான லட்சணமா, நீங்க பாய்ஞ்சு அவன் சட்டையப் பிடிச்சிருக்க வேண்டாமா?"

"பிடிச்சா? எல்லாம் சரியாயிடும்னு நினைக்கிறியா... அசடு...அவனுக்கு இன்னும் வைராக்கியம் வரும்; மறுபடியும் சந்தர்ப்பம் பார்க்கத் தோணும்...சில விஷயங்களை ரொம்பக் கிளறக் கூடாது- அப்படியே விட்டுடணும்..."

"அது சரி...குழந்தை மனசை இது ரொம்ப பாதிச்சிருக்கு... இன்னிக்கு முழுக்க அழுகைதான்..."

"அவ உன்னை மாதிரியே இருக்கா, சின்ன விஷயத்தைக் கூட ஸீரியஸ்ஸா எடுத்துக்கறா... எல்லாம் நாம வளர்க்கறதுலத்தான் இருக்கு..."

இதற்கு மேல் என்ன சொல்வாள் விஜயா?

ரகுராமன் அடிக்கடி எதிர் வீட்டுக்குப் போய் வருவது வழக்கமாகி விட்டது...விஜயாவும் முன் போல் இல்லை. தனது உரிமையை விட்டுக் கொடுக்க இயலாதவளாக -அவனுடன் சண்டைக்கு நிற்கிறாள்...

"மஞ்சள் கண்ணாடியாலே பார்த்தா - உலகமே மஞ்சளாத்தான் தெரியும். நீ நினைக்கிற மாதிரி எதுவுமே இல்லை. ரஞ்சித் அம்மாவுக்கு உடம்பு சரியில்லை. அதான் போய் பார்த்துட்டு வர்றேன...வளர்ந்த குழந்தைங்களை வச்சிட்டு இப்படியெல்லாம் கத்தாதே!"

அவன் – மிதயாகவே பதிலளிக்கிறான்.

ஒரு நாள் - அந்த அம்மாக்காரிக்கு நெஞ்சு வலி என்று-இங்கிருந்து ரகுராம் ஓடினான்...சாமிப் படத்துக்கு முன் அமர்ந்து விபூதி மந்திரித்துக் கொடுத்தான். டாக்டர்களாலே கைவிட்ட கேஸ் ரகுராமின் திருநீற்று மகிமையால் சரியாகி விட்டது என்று அந்த அம்மாள், அக்கம் பக்கத்து வீடுகளிளெல்லாம் தம்பட்டம் அடித்துக் கொண்டாள்...



கிட்டத்தட்ட ஒரு வாரம் - இதையே சாக்காக வைத்துக் கொண்டு ரகுராம் அங்கே போய் உட்காருவதும், அவன் எதையாவது கேட்டனுப்பினான் என்று ரஞ்சித் இங்கு வருவதும்...

"ப்ரியா...ப்ரியா"

"அவ இல்லே. நான் தான் இருக்கேன். என்ன வேணும்; சொல்லு..."

உங்க வீட்டுக்காரர், பூஜை அலமாரியில் ஒரு நோட்டு வச்சிருக்காராம்...வாங்கிட்டு வரச் சொன்னார்..."

விஜி, நோட்டை எடுத்து - ஹால் டேபிளின் மீது போடுவாள்.

"இந்தா...எடுத்துட்டுப் போ..."

"அப்ப ப்ரியா இல்லேங்கறீங்க...."

"இல்லே..."

"வந்தா சொல்லுங்க. ரொம்ப நல்ல பொண்ணு. அழகான பொண்ணு கூட....அழகுல அவ அப்பாவைக் கொண்டிருக்கா இல்லே."

விஜி பேசாமல் நகர்ந்து விடுவாள்.

மகள் உள்ளேயிருந்தால் இந்த சமயத்தில் வெளியே வரக் கூடாதே என்கிற கவலை.

வெளியே போயிருந்தால்-யாரும் துணை இல்லாத இந்த நேரத்தில் உள்ளே வந்து விடக் கூடாதே என்கிற கவலை...

மடியில் நெருப்பை வைத்துக் கட்டிக் கொண்டிருப்பது போலத் தவிக்கிறாள் அவள்.

'பெத்தவங்க செஞ்ச பாவம், பிள்ளைங்களை தொடரும்னு, இதை வச்சுத்தான் பெரியவங்க சொன்னாங்களோ...'



Vennila

'போதும்...இந்த வாழ்க்கையே வேண்டாம். யார் வீட்டுலேயாவது, சமைச்சுப் போட்டு காலத்தை ஓட்டலாமோ...'

மறுபடியும் பழைய சிந்தனைகள். இப்பொழுது கணவனின் சபல சித்தத்தை விடவும், எதிர் வீட்டுக்காரனின் பருந்துப் பார்வையிலிருந்து மகளை ஒளிப்பது எப்படி என்கிற நினைப்பு தான் அதிகம்.

எப்படி?

ஒருநாள் ரகுராம் - எதிர் வீட்டினர் குடும்பத்தோடு பழனி போவதாகவும், தன்னையும் குடும்பத்தோடு வரச் சொல்லி அழைக்கிறார்கள் என்ற போது – அவள் தீர்மானமாய் சொல்லி விட்டாள்.

"இங்கே பாருங்க. நீங்க எங்கே வேணுமானாலும் போயிட்டு வாங்க. நான் தடுக்கலை. ஆனா-என்னையும் குழந்தைங்களையும் இழுக்காதீங்க..."

"நீ வரல்லையின்னா போ. குழந்தைங்க என்ன பாவம் செஞ்சாங்க. சாமி தரிசனம் அவங்களுக்காவது கிடைக்கட்டுமே..."

"தேவையில்லே. அவங்க வீட்டுல இருக்கிற சாமியையே கும்பிடட்டும்..."

ரகுராம் தயங்கித் தயங்கித்தான் கிளம்பினான். 'ரெண்டு நாளாகும் திரும்ப...'

அவள் பதிலே சொல்லவில்லை...

அவன் கிளம்பிய அன்று வெள்ளிக்கிழமை...அன்றையப் பொழுதில் எந்த அசம்பாவிதமும் இல்லை...

மறுநாள்-சனிக்கிழமை-அரை நாள் தான் பள்ளிக்கூடம்...ஹரிக்கு லீவு...பள்ளிக்கூடத்துக்குப் போன ப்ரியா, மூன்று மணியாகியும் பள்ளியிலிருந்து வராதது கவலையைக் கொடுக்க வாசலுக்கும் உள்ளுக்கும் நடையாய்



நடந்து கொண்டிருந்தவள், ஏதோ உள்ளுணர்வின் உந்துதலில்-எதிர் வீட்டின் வாசல் கேட்டைத் திறந்து கொண்டு சந்து வழியாய், புழக்கடைப் பக்கம் போகிறாள்.

நினைத்த மாதிரி கொல்லை வாசல் திறந்து கிடந்தது.

உள்ளே - ப்ரியாவின் கைகளைக் கட்டி, வாயில் துணியை அடைத்து நிற்க வைத்து கிச கிச மூட்டிக் கொண்டிருக்கிறான் ரஞ்சித்.

குழந்தையின் கண்களில் மாலை மாலையாய் கண்ணீர்.

"ரஞ்சித்"

விதிர் விதிர்த்து திரும்பிப் பார்க்கிறான் அவன். விஜயா ஓடி வந்து, மகளின் கட்டுக்களை அவிழ்த்து அவளைத் தன்னோடு சேர்த்துப் பிடித்துக் கொள்கிறாள்..

அவன் அலட்சியத்தை வரவழைத்துக் கொண்டு விஜயாவைப் பார்க்கிறான்.

"என்ன, போலீஸ்லே சொல்லப் போறீங்களா.. சொல்லுங்க. நான், உங்க பொண்ணுதான் என் மேல ஆசைப்பட்டு ஓடி வந்திச்சுன்னு சொல்வேன்...யார் நம்பறாங்களோ இல்லையோ... உங்க வீட்டுக்காரர் நம்புவார்...ஏன்னா அவருக்கு நான் மச்சினன் முறை."

"ச்சீ!"

விஜயா மகளை இழுத்துக் கொண்டு வீட்டுக்கு வந்தவள்-இரண்டு நாளைக்கு-வாசல்தெளித்துக் கோலம் போடக் கூடத் திறக்கவில்லை.

ப்ரியாவை எப்படி பாதுகாப்பது...இதே சிந்தனை தான்...

மூன்றாவது நாள் பகல் ரகுராம் வந்து இறங்குகிறான்...

அவனிடம் நடந்ததை அழுகையும், கோபமுமாய் கலந்து அவள் விசிறியடிக்க-

Vennila

"அப்படியா செஞ்சான்? எங்க கூட கிளம்பினவன் வீடு சரியில்லை. நான் வரல்லையின்னு சொல்லிட்டுத் திரும்பிட்டான். இருக்கட்டும். நான் அவன் அம்மா கிட்ட சொல்றேன்..."

"நீங்க—அக்கிரமம் பண்ணறதுனாலேத்தான் அவனும் இப்படி செய்யறான்."

"நானா...நான் என்ன அக்கிரமம் பண்ணினேன் விஜி? ஏதோ, அந்தப் பொண்ணுக்கு என்னை மாதிரி ஒரு புருஷன் கிடைக்காதான்னு ஆதங்கம். அந்தம்மா என் மேல உசிரையே வச்சிருக்கா. இருக்கட்டும். இவனுக்கு கல்யாணம் முடியறதுக்குள்ளே என்ன அவசரம்—கொஞ்ச நாள் பொறுத்தா—ப்ரியாவை அவனுக்குத் தர்றதாத்தானே வாக்கு கொடுத்திருக்கேன்..."

"என்னது?"

"ஆமா விஜி...வயசு வித்தியாசம்தான் கொஞ்சம் அதிகம். ஆனா என்ன—அப்படி இருக்கற எடத்துலதான்-பொண்ணு புருஷன் சொல்லுக்கு கட்டுப்பட்டிருக்கும்..."

"இதைச் சொல்ல உங்களுக்கு வெட்கமாயில்லே..."

"நீ என்ன நீ... எதுக்கெடுத்தாலும் வெட்கமாயில்லையா-ன்னு கேட்டுட்டே இருக்கே—அவன் நல்ல குடும்பத்துப் பையன். படிப்பு அத்தனையில்லைன்னாலும் பிஸினஸ் மைண்ட். பணத்துக்கு குறைச்சலே இல்லே, நினைச்சா, சிங்கப்பூருக்கும், மலேயாவுக்கும் உன் பெண் பறக்கலாம்..."

"இப்பவே ப்ரியாவுக்கு உடம்பு கொதிக்கறது, அனல் பறக்கறது..."

"சின்னவதானே? நாளடைவுல சரியாயிடும்...மேலும்—ரஞ்ஜித் ஜாதகம்-இவ ஜாதகத்தோட எப்படி பொருந்தறது தெரியுமா?"

அவள் பல்லைக் கடிக்கிறாள்...



ஹூம்...இனிமேல் தாள முடியாது...இதுக்கு முடிவு கட்டியே ஆக வேண்டும்...

மாலை ஏழரை மணி சுமாருக்கு, சந்தனம் மணக்க பூஜைக்கு வந்து உட்கார்ந்த கணவனின் எதிரில்-சமையலறையிலிருந்து மிக்ஸியைக் கொண்டு வந்து வைக்கிறாள்.

"ரிப்பேராச்சு...ஏதாவது செய்ய முடியுமா பாருங்க..."

"நாளைக்கு வேணுமானா - இதை வாங்கினக் கடைக்கே எடுத்திட்டுப் போய்..."

"எனக்கு இப்ப சட்னி அரைக்கணும். இதை நம்பிட்டு-இருந்த அம்மிக் குழவியையும் தூக்கி-உங்க அம்மா கிட்ட கொடுத்திட்டேன்..."

அவன், மிக்ஸியை தலைகீழாய் புரட்டிப் பார்க்கிறான்.

இவள்-இடையில் படுக்கையறைக்குப் போய் ப்ரியாவையும், ஹரியையும் மாடிப் போர்ஷனில் உள்ள குழந்தைகளோடு விளையாடும்படி காதோடு சொல்கிறாள்.

சமையலறை-கொஞ்சம் வசதி குறைச்சலானது. காஸ் சிலிண்டரை நன்கு திறந்து வைத்தவள்—எரிந்து கொண்டிருந்த பல்பைப் பிடுங்கி விட்டு-ஒரு ஃபியூஸ் போன பல்பை செருகி விட்டு சமையலறைக் கதவை இறுகத் தாழிட்டு விட்டு வருகிறாள்.

அவன்-இன்னமும் மும்முரமாய் மிக்ஸியைக் குடைந்து கொண்டிருக்கிறான்...

"இந்தா...இப்பப் போட்டுப் பாரு..."

"..."

"ஏய்...எங்கே போயிட்டே...இதைப் போட்டு ஓடுதான்னு பார்த்துச் சொல்லு..."

Vennila

"கொஞ்சம் நீங்கதான் பாருங்களேன். இந்த ரெண்டு பேரையும் வெளியிலப் போகாதீங்க, போகாதீங்கன்னு சொன்னேன்... எங்கேயோ போயிடுச்சு. அதுவும் பெரிசக்கு தனக்காகவும் தெரியலை...சொன்னாலும் புரியலை....

அவள்-வாசலில் நின்று கொண்டு பக்கத்து வீட்டம்மாளிடம் புலம்பியபடி-இவனுக்கும் சொல்கிறாள்.

"என்ன..."

- இது பக்கத்து வீடு.

"மிக்ஸி ரிப்பேர். கொஞ்சம் சரி பார்க்கச் சொன்னா அது பொறுமையில்லே ... சட்னியில்லைன்னா மட்டும் கோபம் வருது..."

"ஆமாமா... இங்கேயும் அதே கதைதான்...

"ஏய்... சமையல் ரூம் பல்பு ஃபியூஸா..."

"இப்ப எரிஞ்சதே...அங்கேயே சுவிட்ச் போர்டுல வத்திப் பெட்டியும் மெழுகு வர்த்தியும் வச் - "

"படார்!!!"

"ஐயய்யோ...காப்பாத்து..."

உள்ளிருந்து நெருப்பு பிரகாசமாய் - வெளியே எட்டிப் பார்க்க..

"என்னங்க... ஐயோ... எனக்கு மயக்கம் வருதே... யாராவது ஓடி வாங்களேன்..."

விஜயா பரபரத்துக் கொண்டு உள்ளே ஓட, அவளைத் தொடர்ந்து அந்தத் தெருவே அவள் வீட்டுக்குள் பாய - ப்ரியாவும், ஹரியும் மட்டும் - அம்மாவை ஒட்டினாற் போல நின்று கொண்டு பீதி நிறைந்த கண்களுடன் இந்த கோரத்தைப் பார்க்கிறார்கள்...

ரகுராம் இறந்த சில தினங்களில் - அவனது ஆபீஸ் மானேஜர் வந்து விஜயாவுக்கு ஆறுதல் சொல்கிறார்.



"அவனோட பி. எஃப். எல். ஐ. ஸி. தொகையும் வாங்கித் தர்றேம்மா... உங்களுக்கும் எங்க ஆபீஸ்லேயே..."

நடுவில் குறுக்கிட்டு ரகுராமின் தந்தை சொல்கிறார்:

"வேண்டாம் சார். அவளுக்கு இங்கே இருந்தா இதே நினைப்பா இருக்கும். நான், அவளையும் குழந்தைகளையும் எங்க கூடவே அழைச்சிட்டுப் போயிடலாம்னு இருக்கேன்... நீ என்ன சொல்றே விஜயா..."

விஜயா, கண்களைத் துடைத்துக் கொள்கிறாள். சுவரில் மாலையோடு தொங்கிய ரகுராமை ஒரு முறை நிமிர்ந்து பார்க்கிறாள்.

'பரவாயில்லே...இந்த மாதிரிப் பட்டவங்க உசிரோட இருந்து மத்தவங்க பிராணனை எடுக்கறதை விட சுவத்துல தொங்கறதே நிம்மதியா இருக்கு..."

அவள், மாமனாரிடம் கரகரத்தக் குரலில் சொல்கிறாள்.

"அவருக்கு அப்புறம் - எங்களுக்கு வேறே யார் துணை...அத்தையும், நீங்களும்தான்..."

ஹரி மட்டும் - ப்ரியாவிடம் ஏக்கத்துடன் கேட்கிறான்:

"நமக்கு இந்த வருஷம் தீபாவளி கிடையாதாடீ ?"

"மக்கு...நாமதான் பதினஞ்சு நாள் முந்தியே தீபாவளி கொண்டாடிட்டோமே? இனிமே ஒவ்வொரு வருஷமும் அந்த நாள்தான் நமக்கு தீபாவளி..."

ஏதோ புரிந்து கொண்டாற் போல - அந்த பத்து வயசு சிறுவன் தலையாட்டுறான்...

முற்றும்.

Vennila